Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, APRIL 19, 2022

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 19, 2022 | ஒளி: 07 கதிர்: 283 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## அரவிந்தகுமார், ராகவனுக்கு இராஜாங்க அமைச்சுகள்



அரசாங்கத்துக்கு ஆதரவளித்த பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்த குமார், தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் கால்நடை அபிவிருந்தி இராஜாங்க அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். அத்துடன், சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனுக்கு, கல்விச் சேவைகள் மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

# சூடு பிடிக்கிறது

# புதிய அரசியலமைப்பு களம்

“புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதன் மூலமாக, தற்போதுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் காண்போம்“ என, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் யோசனையொன்றை முன்வைத்துள்ளார்.


எனினும், தற்போதுள்ள நெருக்கடி நிலைமைகளை உடனடியாகச் சமாளிக்க வேண்டிய தீர்மானங்களை கையாள்வதே சிறந்தது எனவும் 20ஆவது திருத்தத்தை நீக்கி, 19ஆவது திருத்தத்தை கொண்டுவருவதே இப்போது தீர்வாக அமையும் என்பதுவே பிரதான எதிர்க்கட்சி உட்பட, கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும்பாலான உறுப்பினர்களது நிலைப்பாடாக அமைந்துள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் பாராளுமன்ற கட்சி தலைவர்கள் கூட்டம், நேற்று (18) கூடிய வேளையில் இந்த விடயங்கள் ஆராயப்பட்டிருந்தன.

“அரசாங்கத்தின் மீதான மக்களின் எதிர்ப்பலை அதிகரித்து செல்கின்றது, பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் பங்களிப்பும் கிடைக்கவில்லை. எனவே, இவ்வாறானதொரு நிலைமையில், தற்காலிக ஏற்பாடுகளை செய்து, நிலைமைகளை கையாள்வதை விடவும் அரசியல் அமைப்பை முழுமையாக மாற்றி, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கும் நடவடிக்கைகளை எடுக்க முடியுமென்றால் அதுவே சிறந்த தெரிவாக இருக்கும்” எனக் கருதுவதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### நல்ல நேரம்:



“அரசாங்கத்தின் மீதான மக்களின் எதிர்ப்பலை அதிகரித்து செல்கின்றது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் பங்களிப்பும் கிடைக்கவில்லை. எனவே, இவ்வாறானதொரு நிலைமையில், தற்காலிக ஏற்பாடுகளை செய்து நிலைமைகளை கையாள்வதை விடவும் அரசியலமைப்பினை முழுமையாக மாற்றி, நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கும் நடவடிக்கைகளை எடுக்க முடியுமென்றால் அதுவே சிறந்த தெரிவாக இருக்கும்” என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

### தற்போது அவசியமில்லை



“தற்போதுள்ள நிலைமையில் உடனடியாக கையாள வேண்டிய விடயங்களை செய்வோம். மீண்டும் 19ஆவது திருத்த சட்டத்தை கொண்டுவருவோம். புதிய அரசியல் அமைப்பை கொண்டுவருவதென்றால் அதற்கு நீண்ட காலம் தேவைப்படும். மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ள வேண்டும், அதற்கான கால அவகாசம் இப்போது இல்லை” என லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவித்தார்.

### இதுவே நேரம்



“நாட்டின் இன்றைய சூழ்நிலையில் நாடு போகும் போக்கில், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவோம் என்றால் அதற்கு சகல மக்களும் இரண்டு கைகளையும் தூக்கி தமது ஆதரவை வழங்குவார்கள். அடுத்த ஆறுமாத காலத்துக்குள் புதிய அரசியல் அமைப்பினை கொண்டுவர இதுவே மிகச்சிறந்த தருணமாக இருக்கும்” என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சுமந்திரன் எம்.பி தெரிவித்தார்.

### முந்தினார் மஹிந்த



நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை தொடர்பான அரசியலமைப்பு திருத்தங்கள் தொடர்பான பிரேரணையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சரவையில் முன்வைக்கவுள்ளார் என பிரதமர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## எரிவாயு நெருக்கடியால்

## உணவு, தேநீருக்கு மக்கள் அல்லல்

### பசிலையே குற்றம் சாட்டுகின்றனர் என்கிறார் சம்பத்



புத்தாண்டு விடுமுறை முடிந்து வேலைக்குத் திரும்பியுள்ள மக்கள், தொடரும் எரிவாயு நெருக்கடி காரணமாக உணவு மற்றும் ஒரு கோப்பை தேநீரைக் கூட வாங்குவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என, மக்கள் உரிமைகள் பாதுகாப்பு அறக்கட்டளை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## அமெரிக்க டொலருக்கு நிகராக

## இறங்கு முகத்தில் இலங்கை ரூபாய்



அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி நேற்று (18) மீண்டும் வரலாறு காணாத வீழ்ச்சியை சந்தித்துள்ளது

அண்மையில் மத்திய வங்கியினால் ரூபாயின் பெறுமதியை மிதக்க விடுவதற்கான தீர்மானத்தையடுத்து, கடந்த சில நாள்களாக ரூபாய்க்கு எதிராக அமெரிக்க டொலரின் பெறுமதி தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

தொடர்ச்சி P2

## பஸ் கட்டணத்தை ரூ.40ஆக திருத்துக




அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் வீழ்ச்சியைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை எனின், குறைந்தபட்ச பஸ் கட்டணத்தை 40 ரூபாயாக திருத்தியமைக்க வேண்டும் என்று, இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, நேற்று (18) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பசிலுக்கு பயணத்தடை விதிக்க மறுப்பு

## மே 2 வரை கப்ரால் பறக்கத் தடை



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடை உத்தரவை மே மாதம் 2 ஆம் திகதி வரை நீட்டிக்குமாறும் அவருக்கு அழைப்பாணை பிறப்பிக்குமாறும், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல, நேற்று (18) கட்டளையிட்டார். கப்ராலை நேற்றையதினம் (18) மன்றில் ஆஜராகுமாறு கடந்த 7ஆம் திகதி அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்த போதும், அவர், நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை.

தொடர்ச்சி P2




## காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தில்

## அமைதியின்மை ஏற்பட்டால் அறிக்கை சமர்ப்பிக்கவும்

### கோட்டை பொலிஸாருக்கு கொழும்பு நீதிமன்றம் உத்தரவு

அரசாங்கத்துக்கு எதிராக காலிமுகத்திடலில் இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டத்தின் போது ஆர்ப்பாட்டக்காரர்களால், பொதுமக்களின் பாதுகாப்புக்கு இடையூறோ அல்லது அமைதியின்மையோ ஏற்பட்டால் மன்றில் ‘பி’ அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோட்டை பொலிஸாருக்கு கொழும்பு

தொடர்ச்சி P2

## 41 பேரும் தனித்து அமர முஸ்தீபு

அரசாங்கத்தில் இருந்து விலகிய 41 பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய சுயாதீனக் குழு, சபையில் தனிக் குழுவாக அமர சபாநாயகரிடம் அனுமதி கோரியுள்ளது.

இன்றையதினம் (19) முற்பகல் 10 மணிக்கு சபை அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே மேற்குறிப்பிட்ட கோரிக்கை நேற்றையதினம் (18) விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அல்லது எதிர்க்கட்சி ஆசனங்களில் தனியான குழுவாக ஆசனங்களை ஒதுக்குமாறு, சபாநாயகரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## ஐ.ஓ.சி கூட்டியது: சி.பி.சி அறிவித்தது



லங்கா ஐ .ஓ.சி நிறுவனம் நேற்று முன்தினம் நள்ளிரவு (17) முதல் எரிபொருட்களின் விலையை அதிகரித்துள்ள நிலையில், எரிபொருட்களின் விலையை உயர்த்துவது குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (சி.பி.சி)

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியை நீக்குவது முடியாத காரியம்

அரசியலமைப்புக்கமைய ஜனாதிபதியை நீக்குவதானது, ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுவது போன்று செய்வதற்கு முடியாததொரு விடயமாகும் என்றும் அரசியலமைப்பு தொடர்பில் தெளிவான புரிதல் இன்றி, தற்போது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடிப்படையாக கொண்டு ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினால் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது போன்று தோன்றுவதாகவும்

தொடர்ச்சி P2

## முகக்கவசம் அணிவதில் தளர்வு

பொதுப் போக்குவரத்து மற்றும் உள்ளக நிகழ்வுகளைத் தவிர, பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என புதிய சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண அறிவித்துள்ளார்.

இந்த, விதிமுறை தளர்வு நேற்று (18) முதல் உடனடியாக அமலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

## புதிய அமைச்சரவையில்

## ராஜபக்ஷர்களில் நால்வர் இல்லை

### சிரேஷ்ட உறுப்பினர்களும் பெண்களும் இல்லை

நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் 17 பேர் கொண்ட புதிய அமைச்சரவை நேற்று காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டிருந்தது.

புதிய அமைச்சரவையை நியமிக்க முன்னர், அமைச்சுப்பதவியில் இருந்த சிரேஷ்ட அமைச்சர்களிடத்தில் பதவிகளை பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதியும் பிரதமரும் தொடர்ச்சியாக வலியுறுத்திய போதிலும், சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் தாம் அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்ளப்போவதில்லை என அறிவித்திருந்த நிலையில், பல புதிய உறுப்பினர்களை கொண்டே தற்போதைய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அரசாங்கத்தில் பிரதான அமைச்சுப் பதவிகளில் இருந்த பசில் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, ஷசீந்திர ராஜபக்ஷ, காமினி லொகுகே ,

தொடர்ச்சி P2

## உள்ளே



"அரசியலமைப்பில் மாற்றங்களை நிறைவேற்ற வாய்ப்பு உள்ளது”

முழுச் செய்தி P3

## அமைச்சரவை மாற்றத்தால் தட்டுப்பாடுகள் தீராது

### கொழும்பை நோக்கி நகர்கிறது ஜே.வி.பியின் மக்கள் வெள்ளம்

அரசாங்கம், மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காமல் தொடர்ச்சியாக அமைச்சரவையை மாற்றியமைத்து வருவதாகத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், இது, எதிர்ப்பாளர்களும் பொதுமக்களும் எதிர்பார்த்த பதில் இல்லை என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## பஸ் கட்டணத்தை ரூ.40ஆக திருத்துக

வருடாந்த பஸ் கட்டண திருத்தம் எதிர்வரும் ஜூலை மாதம் அமுலுக்கு வரும் என்றும் புதிய பஸ் கட்டணத்தில், டொலர் பெறுமதி மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அனைத்து அம்சங்களும் கருத்திற் கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு பெருமளவில் சரிந்துள்ளதால், பஸ் டயர்கள், டியூப்கள், உராய்வு நீக்கிகள், பழுதுபார்ப்பு, உதிரி பாகங்கள் மற்றும் பஸ்களை இயக்க தேவையான அனைத்து உபகரணங்களின் விலைகளும் கடுமையாக உயர்ந்துள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

கடந்த இரண்டு மாதத்தில், டயர்களின் விலை 40 சதவீதத்தாலும் உராய்வு நீக்கிகளின் விலை 100 சதவீதத்தாலும் உயர்ந்துள்ளதாகவும் தெரிவித்த அவர், உதிரிப்பாகங்கள், பழுதுபார்ப்பு, பஸ்களின் தவணைக் கட்டணம் மற்றும் வட்டிவீதம் ஆகியவையும் பஸ் கட்டண திருத்தத்தில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்றார்.

எனவே, அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியை கட்டுப்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுத்து, வருடாந்த பஸ் கட்டண திருத்தத்துக்கு சிறந்த கட்டணத்தை பெற்றுக்கொடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

## ராஜபக்ஷர்களைப் போல முஸ்லிம் தலைவர்களும் ஏமாற்றுகிறார்கள்

ஒழுக்காற்று நடவடிக்கை என்பதை முஸ்லிம் கட்சிகள் வேடிக்கையாக மாற்றியுள்ளதாக தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், ராஜபக்ஷர்கள் எவ்வாறு சிங்கள மக்களை ஏமாற்றி வருகிறார்களோ அதேபோல முஸ்லிம்களை, முஸ்லிம் கட்சி தலைவர்கள் ஏமாற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், 20 ஆவது திருத்த சட்டத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென கூறினார்கள். ஆனால் தேசிய அமைப்பாளர் பதவியே வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

நான்கு மாதங்களாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது இப்போது, பசில் ராஜபக்ஷவுடன் அமைச்சுக்களுக்காக பேரம் பேசிக்கொண்டிருக்கின்றனர். பிரதி சபாநாயகர் விடயத்தில் தங்களது கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியுடன் இணைந்து வாக்களிக்க வேண்டும். இல்லை என்றால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளதாகவும் கூறினார்.

இதற்கு முன்னர் கூறிய ஒழுக்காற்று நடவடிக்கையே இதுவரையில் எடுக்கவில்லை. அமைச்சுப் பதவிகளுக்காக பேரம் பேசிக்கொண்டிருப்பவர்கள் எவ்வாறு எதிர்க்கட்சியுடன் இணைந்து வாக்களிப்பார்கள்? எனவும் கேள்வி எழுப்பினார்.

மக்களை ஏமாற்றுவதில், ராஜபக்ஷர்களைப் போல முஸ்லிம் தலைவர்களும் இருக்கின்றனர் என்று தெரிவித்த இம்ரான் மஹ்ரூப், அவ்வாறானவர்களுக்கு அடுத்தடுத்த தேர்தல்களில் மக்கள் நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## ஊடகவியலாளர்கள் நாளை போராட்டம்

காலி முகத்திடல் மக்கள் போராட்டத்துக்கு ஆதரவாக ஊடகவியலாளர்களும் தங்களது ஆதரவை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதோடு, இலங்கை முழுவதிலும் உள்ள ஊடகவியலாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்றிணைந்த பேரணி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக நாளை (20) ஆரம்பமாக உள்ளது.

இந்த பேரணியில் ஊடகவியலாளர்களை பங்கேற்குமாறு, ஊடகத் துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் (FMETU) அழைப்பு விடுத்துள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான தன்னெழுச்சியான போராட்டம் நாட்டு மக்களுக்கு அதிகாரம் வழங்குமாறு நாடு தழுவிய ரீதியில் வளர்ந்து வரும் போராட்டமாக மாறி வருவதையும், ஊடகத் துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஊடக நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து ஊடகவியலாளர்களையும் அன்றைய அணிவகுப்பில் பங்கேற்க அனுமதிக்குமாறும், FMETU சம்மேளனம் கேட்டுக்கொண்டுள்ளது.

# சூடு பிடிக்கிறது புதிய அரசியலமைப்பு களம்

எனினும், கட்சி தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட கட்சி தலைவர்கள் பலர், சபாநாயகரின் கருத்துடன் இணக்கம் தெரிவித்திருக்கவில்லை. "தற்போதுள்ள நிலைமையில் உடனடியாக கையாள வேண்டிய விடயங்களை செய்வோம். 20ஆவது திருத்த சட்டத்தை நீக்கிவிட்டு, 19ஆம் திருத்த சட்டத்தை கொண்டுவருவோம். புதிய அரசியல் அமைப்பை கொண்டுவருவதென்றால் அதற்கு நீண்ட காலம் தேவைப்படும். மக்கள் ஆணையை பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான கால அவகாசம் இப்போது இல்லை" எனக் கூறியுள்ளனர்.

எனினும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், மாற்றுக்கருத்தினை முன்வைத்து புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதே தீர்வாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

"நாட்டின் இன்றைய சூழ்நிலையில் நாடு போகும் போக்கில், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவோம் என்றால் அதற்கு சகல மக்களும் இரண்டு கைகளையும் தூக்கி தமது ஆதரவை வழங்குவார்கள். அடுத்த ஆறுமாத காலத்துக்குள் புதிய அரசியலமைப்பினையும் கொண்டுவந்துவிடலாம். ஆகவே, புதிய அரசியலமைப்பினை உருவாக்க இதுவே மிகச்சிறந்த தருணமாக இருக்கும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுமந்திரன் எம்.பியின் கருத்துடன் ஆளுந்தரப்பு உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, டிலான் பெரேரா ஆகியோர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பசிலுக்கு பயணத்தடை விதிக்க மறுப்பு

## மே 2 வரை கப்ரால் பறக்கத் தடை

பிரதிவாதிக்காக தான் ஆஜராகியிருப்பதால், தனது சேவை பெறுநர், மன்றில் ஆஜராக வேண்டும் என்று முந்தைய நீதிமன்ற உத்தரவுக்கு அவசியமில்லை என்று சிரேஷ்ட சட்டத்தரணி ஜீவந்த ஜயதிலக்க மன்றுக்கு அறிவித்தார்.

மன்றில் தெரிவிக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்ட கொழும்பு மேலதிக நீதவான், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரை எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மீண்டும் அழைப்பாணை பிறப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மேலதிக நீதவான் நிராகரித்தார்.

இறையாண்மைப் பத்திர விவகாரத்தில் மேற்குறிப்பிட்ட இருவரையும் சாட்சியாளராக பெயரிடுமாறும் அவர்கள் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்குமாறும் மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன விடுத்த கோரிக்கையே நிராகரிக்கப்பட்டது.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1)(அ) பிரிவின் கீழ், தென் மாகாண முன்னாள் ஆளுநர் ரஜித் கீர்த்தி தென்னகோன் தாக்கல் செய்த தனிப்பட்ட மனு ஒன்றின் பிரகாரம் கப்ராலுக்கு எதிரான உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

500 மில்லியன் அமெரிக்க டொலர் இறையாண்மை பத்திரத்தை செலுத்த நடவடிக்கை எடுத்ததில் இருந்து நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கப்ரால் தான் காரணம் என்று மனுதாரர் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

2005 முதல் 2015 வரை மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவார்ட் கப்ரால் செயற்பட்ட காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்துக்கு, 10.4 முதல் 10.6 பில்லியன் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றவியல் நம்பிக்கை மீறலுக்காக தண்டனைச் சட்டத்தின் 388ஆவது பிரிவின் கீழ் கப்ரால் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்ததாகவும் பதிவுசெய்யப்பட்ட பங்கு மற்றும் பத்திரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்ததற்கு முன்னாள் ஆளுநரும் பொறுப்பு எனவும் மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமைதியின்மை ஏற்பட்டால் அறிக்கை சமர்ப்பிக்கவும்

பிரதான நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவெல, நேற்று (18) உத்தரவிட்டார்.

காலி முகத்திடலில் இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டம் நேற்றுடன் பத்தாவது நாளாக தொடர்கின்ற நிலையில், ஆர்ப்பாட்டம் தொடர்பிலான அறிக்கையை கொழும்பு கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தார்.

ஆர்ப்பாட்டம் காரணமாக காலி முகத்திடலில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தின் போது, பல நபர்கள் நோய்வாய்ப்பட்டதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் பாதுகாப்புக்கு ஆர்ப்பாட்டம் இடையூறாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போராட்டத்தில் ஏதேனும் அமைதியின்மை ஏற்பட்டால் நீதிமன்றத்தில் 'பி' அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றும் கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்ததையடுத்தே, மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் (17) இரவு, ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தவர்கள், ஜனாதிபதி செயலகத்துக்கு ஒளியூட்டியிருந்தனர். இதனை அங்கு கடமையிலிருந்த பொலிஸார், தடுப்பதற்கு கடும் பிரயத்தனம் செய்து இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷர்களில் நால்வர் இல்லை

மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, பவித்ரா வன்னியாராச்சி, கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்டோருக்கு புதிய அமைச்சரவையில் அமைச்சுப்பதவிகள் வழங்கப்படவில்லை.

ஆளுங்கட்சியின் பெண் எம்.பிக்களுக்கும் அமைச்சு பதவிகள் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாட்டில் உருவாகியுள்ள மக்களின் அரச எதிர்ப்பு போராட்டங்கள் காரணமாக அரசாங்கம் மாற்று வேலைத்திட்டங்களை கையாள வேண்டும் என வலியுறுத்தி சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் தமக்கு அமைச்சுப்பதவிகளை பெற்றுக்கொள்ள முடியாதென வெளிப்படையாக அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## 41 பேரும் தனித்து அமர முஸ்தீபு

அதற்கமைய, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 13 எம்.பிக்கள், தேசிய சுதந்திர முன்னணி, பிவிதுறு ஹெல உறுமய கட்சிகளின் 10 எம்.பிக்கள், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சுயாதீன எம்.பிக்கள் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் இரண்டு உறுப்பினர்கள் ஆகியோரே சபையில் தனியான குழுவாக அமரவுள்ளனர்.

## ஜனாதிபதியை நீக்குவது முடியாத காரியம்

அரசாங்கத்துக்கு ஆதரவான சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

அரசாங்கத்துக்கு ஆதரவான சட்டத்தரணிகளுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (18) முற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான டபிள்யூ. தயாரத்ன, ரஷிக் ஷாருக் உள்ளிட்ட சட்டத்தரணிகள் பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர். நாட்டில் இதுவரையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்டங்களால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாதக நிலைமைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

88-89 காலப்பகுதிகளில் இடம்பெற்ற போராட்டங்களின் போது, அன்றைய நாட்டின் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்தனவை படுகொலை செய்ய வேண்டும் என்று மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், நாட்டுக்கு பெரும் அழிவை ஏற்படுத்தியே நிறைவடைந்தது. கடந்த காலம் மற்றும் தற்போதைய சட்டங்களைப் பற்றிய புரிதலின்றி இளைஞர், யுவதிகளை ஈடுபடுத்தி, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்டத்தினை, நாடு முழுவதும் முன்னெடுப்பதற்கு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமையானது, நாட்டில் மீண்டும் ஒரு பேரழிவை ஏற்படுத்தும் என சட்டத்தரணிகள் தெரிவித்தனர். தற்போதைய ஆர்ப்பாட்டங்களுக்கு நிதி பெற்றுக்கொடுத்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதற்கு சாதாரண பொதுமக்கள் பணம் வழங்கியுள்ளதாக தெரியவில்லை எனவும், ஏதேனுமோர் அமைப்பொன்றால் திட்டமிட்டு இதற்கான பணத்தை செலவிட்டு, நாட்டை சீர்குலைக்க முயற்சிப்பதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

பல்வேறு வழிகளிலும் நாட்டை சீர்குலைக்கும் போராட்டத்துக்கு இலங்கை ஊடகங்கள் தெரிந்தோ தெரியாமலோ ஆதரவளிக்கக் கூடாது எனவும் இவ்வாறான நிலையில் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மக்கள் பிரதிநிதிகளின் சொத்துகளை மதிப்பிடல் காலத்துக்கு உகந்தது என்றும், அதனை அரச நிறுவனங்கள் மற்றும் அரச அதிகாரிகளிடமிருந்து ஆரம்பிக்க வேண்டும் எனவும், மக்கள் பிரதிநிதிகள் காலத்துக்கு காலம் மாறினாலும், அரச அதிகாரிகள் மாற்றமடையாமை மற்றும் அரச நிறுவனங்களதும், அதிகாரிகளதும் ஊழல் மற்றும் மோசடிகள் இன்று அரசியல்வாதிகள் மீது சுமத்தப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல்கள் மக்களை ஈடுபடுத்தி, அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்கு உட்படுத்துவதற்கும், ஜனாதிபதி மற்றும் பிரதமரை நீக்கி அவர்களது குறுகிய இலக்குகளை அடைவதற்கு முயற்சிப்பதாகவும், எனவே, இந்த நெருக்கடியை மிகுந்த புரிதலுடன் மக்களின் தேவைகளை நிறைவேற்றி, ஜனாதிபதியும் பிரதமரும் துணிச்சலுடன் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும், மக்களை ஈடுபடுத்தி வேறு அமைப்புகள் முன்னெடுத்துவரும் அரசியல் சதி குறித்து மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதன்போது தெரிவித்தார்.

## உணவு, தேநீருக்கு மக்கள் அல்லல்

நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அதன் தலைவர் அசேல சம்பத், மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

எனினும், அவர்கள் எரிவாயு நிறுவனத்தை குற்றம் சாட்டவில்லை என்றும் எரிவாயு பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சரவை உரிய தீர்மானங்களை உரிய நேரத்தில் எடுக்கவில்லை என்பதால் முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவையே குற்றம் சாட்டுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி உள்ளிட்ட அதிகாரிகளின் ஆதரவு தமக்கு கிடைக்கவில்லை எனக் கூறி, லிட்ரோ கேஸ் நிறுவனத்தின் தலைவர், தனது பதவியை இராஜினாமா செய்தமையையும் அவர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சுகளின் பெயர்கள் மற்றும் பிரதானிகளை மாற்றுவதன் மூலம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது எனவும் முழு அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இப்போது உடனடியாக நடவடிக்கை எடுத்து, மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றார்.

## இறங்கு முகத்தில் இலங்கை ரூபாய்

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட நேற்றைய வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்களின்படி, அமெரிக்க டொலர் 322 ரூபாய் 72 சதத்துக்கு வாங்கப்பட்டு 334 ரூபாய் 99 சதத்துக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை, ஸ்டேர்லிங் பவுண்ட் ஒன்றின் கொள்வனவு விலை 423 ரூபாய் 68 சதமாகவும் விற்பனை விலை 498 ரூபாய் 67 சதமாகவும் காணப்பட்டது.

யூரோ ஒன்றின் கொள்வனவு விலை 353 ரூபாய் 30 சதமாகவும் விற்பனை விலை 365 ரூபாய் 04 சதமாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சரவை மாற்றத்தால் தட்டுப்பாடுகள் தீராது

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, மக்கள் விடுதலை முன்னணியால் பேருவளையில் நேற்று முன்தினம் (17) ஆரம்பிக்கப்பட்ட எதிர்ப்பு பேரணி வாதுவையை நேற்று (18) அடைந்தபோது அங்கு ஊடகங்களிடம் பேசிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

எரிபொருள், எரிவாயு, பால்மா தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு உள்ளிட்ட பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இன்றைய அமைச்சரவை மாற்றத்தினால் தீர்வு கிடைக்காது எனவும் தற்காலிக மாற்றங்களை ஏற்படுத்தி பிரச்சினைகளை தவிர்க்க அரசாங்கம் முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டார்.

பொது மக்கள் அமைச்சரவை மாற்றத்தை நாடவில்லை என்றும், ஒட்டுமொத்த ஆளும் குடும்பத்தின் இராஜினாமாவையே விரும்புவதாகவும் வலியுறுத்திய அவர், இப்போது வாக்காளர்கள் தங்களைச் சுற்றி திரண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய ஊழல் ஆட்சியாளர்களை வெளியேற்றி, புதிய மக்கள் நேச அரசாங்கத்தை நியமிக்க வேண்டும் என்பதற்காகவே இந்த எதிர்ப்பு பேரணியை ஏற்பாடு செய்துள்ளோம். இன்று (19) லிப்டன் சுற்றுவட்டத்தை நோக்கி பேரணி செல்லவுள்ளது என்றும் தெரிவித்தார்.

## ஐ.ஓ.சி கூட்டியது: சி.பி.சி அறிவித்தது

ஐ.ஓ.சி நிறுவனத்தின் அதிகரிப்பின் பிரகாரம் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 35 ரூபாயாலும் ஒரு லீற்றர் டீசலின் விலை 75 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிறுவனம் அறிவித்தது. ஒரு லீற்றர் 92 ஒக்டேன் பெட்ரோலின் விலை 338 ரூபாயாகவும், ஒரு லீற்றர் ஓட்டோ டீசலின் விலை 289 ரூபாயாகவும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மார்ச் மாதம் 26 ஆம் திகதி இறுதியதாக ஐ .ஓ.சி நிறுவனத்தால் எரிபொருளுக்கான விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் தற்போது நாட்டில் நிலவும் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி காரணமாக மீண்டும் விலையை அதிகரிக்க நேர்ந்துள்ளதாகவும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

# அரசியலமைப்பில் மாற்றங்களை நிறைவேற்ற வாய்ப்பு உள்ளது

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி என்ற முறையில், அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகத்தின் கட்டமைப்புக்குள் எப்போதும் செயற்படுகின்றேன் என்று தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சட்டமியற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உள்ளது. எனவே, அரசியலமைப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக்களை பாராளுமன்றத்தில் கலந்துரையாடி தேவையான மாற்றங்களை நிறைவேற்ற வாய்ப்பு உள்ளது. அது தொடர்பில் அவசியமான ஒத்துழைப்பை எந்த நேரத்திலும் பாராளுமன்றத்திற்கு வழங்குவதற்கு நான் தயாராக உள்ளேன்.



இலங்கையின் வரலாற்றில் மிகவும் கடினமான அதே போன்று, சவாலான பொருளாதார ரீதியாக, அரசியல் ரீதியாக, சமூக ரீதியாக நாடு தீர்மானமிக்கதொரு தருணத்தை எதிர்கொண்டுள்ள சந்தர்ப்பத்திலேயே நான் உரையாற்றுகிறேன்.

இன்று சிரேஷ்ட நிலை பாராமல் புதிய அமைச்சர்களை நியமித்துள்ளேன். அமைச்சர் பதவி என்பது ஒரு வரப்பிரசாதம் அல்ல. அது ஒரு பாரிய பொறுப்பு ஆகும். அமைச்சர் என்ற முறையில் கூடுதல் சலுகைகள் எதையும் பயன்படுத்த வேண்டாம் என்று நான் உங்களிடம் கேட்டுக்கொள்கிறேன். நேர்மையான, திறமையான மற்றும் தூய்மையான நிர்வாகத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதையே நான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன்.

மக்கள் கோரிய முறைமையை (System Change) மாற்ற இன்றைய நெருக்கடி ஒரு நல்ல சந்தர்ப்பம். உங்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதே நேரத்தில், இந்த இளைஞர்களிடம் அதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு திட்டத்திற்கு இதற்கு முன்னர் சென்றிருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன். அதே போன்று, இரசாயன உரங்களை விவசாயிகளுக்கு வழங்காமல் இருந்தது தவறு என நினைக்கிறேன்.அவற்றை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட பல சிக்கல்களால் இன்று மக்கள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றனர். அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

இன்று நமது நாடு கடுமையான அந்நியச் செலாவணி பற்றாக்குறையையும் கடன் நெருக்கடியையும் சந்தித்து வருகிறது. இந்த நேரத்தில் எங்களிடம் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட அந்நியச் செலாவணியை மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும். மேலும் அவசர அந்நியச் செலாவணி தேவைகளுக்குப் பணம் தேட வேண்டும்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள எனது பொருளாதார முகாமைத்துவக் குழு ஏற்கனவே எமது நட்பு நாடுகளுடனும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களுடனும் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

ஒரு மாதத்திற்கு முன்பு, சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு வேலைத்திட்டத்தில் இணைய விருப்பம் உள்ளதாக அரசாங்கம் அறிவித்தது. அந்த கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்வதற்காக நிதி அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்கெனவே அமெரிக்கா சென்றுள்ளனர்.

சந்தையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு மற்றுமொரு முக்கிய காரணம், எதிர்காலத்தில் தட்டுப்பாடு ஏற்படும் என சந்தேகித்து மக்களால் பெருமளவில் எரிபொருள் களஞ்சியப்படுத்தப்படுகின்றமை ஆகும். இதன் காரணமாக நாட்டில் எரிபொருளுக்கான தேவை கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

எதிர்வரும் வாரங்களில் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான தீர்வுகள் மற்றும் தீர்மானங்களையும் நாங்கள் ஏற்கனவே எடுத்துள்ளோம். நாம் அவற்றைச் செயற்படுத்தி வருகிறோம்.

குறுகியகால பிரச்சினைகளுக்கான தீர்வுகளை தேடுவதோடு, இந்த நிலை மீண்டும் ஏற்படாமல் தடுக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசியல் காரணங்களுக்காக பல தசாப்தங்களாக காலதாமதமாகி வரும் சில தீர்மானங்களை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் நாம் எடுக்க வேண்டியுள்ளது. ொருளாதாரத்தை சரியான திசையில் வழிநடத்தி, நமது எதிர்கால சந்ததியினரின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு இப்போது நமக்கு உள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் நாட்டின் முன்னேற்றத்திற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணையுமாறு நான் அழைக்கிறேன். மேலும், இந்த நெருக்கடியைத் தீர்ப்பதில் எங்களுடன் இணையுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் நான் அண்மையில் அழைப்பு விடுத்தேன். என்னுடைய அழைப்பை ஏற்று எங்களுடன் இணைந்து பணியாற்ற அவர்களுக்கு இன்னும் வாய்ப்பு உள்ளது.

ஆசியாவின் பழமையான ஜனநாயக நாடுகளில் இலங்கையும் ஒன்று. அனைத்து குடிமக்களின் பாதுகாப்பும் சுதந்திரமும் அரசியலமைப்பின்படி செயற்படும் ஜனநாயக ஆட்சிமுறையில் தங்கியுள்ளது.சமூகத்தின் மிகவும் சுறுசுறுப்பான பகுதியினரான இளைஞர்கள் தங்கள் அழுத்தத்தை அவர்களுக்கே உரிய வழியில் வெளியிடுவதில் எந்த தவறும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

இனம், மதம், அரசியல் வேறுபாடின்றி நாட்டை நேசிக்கும் பெரும்பாலான மக்கள் தற்போதைய ஆட்சியின் தவறுகளை திருத்தி நாட்டைக் கட்டியெழுப்பவே விரும்புகின்றார்கள், நாட்டைத் தோல்வி அடையச் செய்வதற்கு அல்ல என்று நான் நம்புகிறேன். எனவே, உங்கள் ஜனநாயகப் போராட்டங்களை வன்முறைப் பாதையில் திசை திருப்ப சந்தர்ப்பவாதிகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று இந்த இளைஞர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி என்ற முறையில், அரசியலமைப்பு மற்றும் ஜனநாயகத்தின் கட்டமைப்பிற்குள் நான் எப்போதும் செயற்படுகின்றேன்.

நாட்டின் சட்டமியற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உள்ளது. எனவே, அரசியலமைப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகள் தெரிவித்த கருத்துக்களை பாராளுமன்றத்தில் கலந்துரையாடி தேவையான மாற்றங்களை நிறைவேற்ற வாய்ப்பு உள்ளது. அது தொடர்பில் அவசியமான ஒத்துழைப்பை எந்த நேரத்திலும் பாராளுமன்றத்திற்கு வழங்குவதற்கு நான் தயாராக உள்ளேன்.

அதற்கிணங்க, நாட்டின் அதியுயர் அரசியலமைப்புக்கு மதிப்பளித்து, எதிர்காலத்தில் தேவையான மாற்றங்களைச் செய்து, இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை விடுவிப்பதாக நான் உறுதியளிக்கிறேன், மேலும் இது தொடர்பாக மக்களுக்குத் தேவையான ஆதரவை வழங்குமாறு நான் உங்கள் அனைவரிடமும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் ஒருமுறை உங்களை வாழ்த்துகிறேன். மேலும் மக்கள் எதிர்பார்ப்பது போல் நேர்மையாகவும், திறமையாகவும், தூய்மையாகவும் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று நான் மீண்டும் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

# புதிய அமைச்சரவை விபரம்

## அமைச்சர்கள்

தினேஷ் குணவர்தன - பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
ரமேஷ் பத்திரன - கல்வி மற்றும் பெருந்தோட்டம்
நாசீர் அஹமட் - சுற்றாடல்
டக்ளஸ் தேவானந்தா - மீன்பிடி
கனக ஹேரத் - நெடுஞ்சாலை
நாலக கொடஹேவா - ஊடகத்துறை
காஞ்சனா விஜேசேகர மின்சாரம் மற்றும் எரிசக்தி
சன்ன ஜயசுமண சுகாதாரம்
பிரசன்ன ரணதுங்க - பொது பாதுகாப்பு, சுற்றுலா
திலும் அமுனுகம - போக்குவரத்து, கைத்தொழில்
விதுர விக்கிரமநாயக்க - தொழிற்துறை
ஜனக வக்கும்புர - விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம்
ஷெஹான் சேமசிங்க - வர்த்தகம் மற்றும் சமுர்த்தி
மொஹான் பிரியதர்ஷன டி சில்வா - நீர் வழங்கல்
விமலவீர திஸாநாயக்க - வனவிலங்கு, வன வள பாதுகாப்பு
தேனுக விதானகமகே -விளையாட்டு, இளைஞர் விவகாரம்
பிரமித பண்டார தென்னகோன் - துறைமுகங்கள் மற்றும் கப்பல்

## இராஜாங்க அமைச்சர்கள்

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் - பாதுகாப்பு இராஜாங்கம்
ரோஹன திஸாநாயக்க - உள்ளூராட்சி, மாகாண சபைகள்
அருந்திக பெர்னாண்டோ- பெருந்தோட்டம்
லொஹான் ரத்வத்த - நகர அபிவிருத்தி
தாரக பாலசூரிய - வெளிநாட்டு விவகாரங்கள்
இந்திக்க அனுருத்த - வீடமைப்பு
சனத் நிஷாந்த - நீர் வழங்கல்
சிறிபால கம்லத் - மஹாவலி
அனுராத ஜயரத்ன - நீர்ப்பாசனம்
சிசிர ஜெயக்கொடி - சுதேச மருத்துவம்
பிரசன்ன ரணவீர - தொழில்துறை
டி.வி.சானக - சுற்றுலா, மீன்பிடி
டிபி ஹேரத் - கால்நடை
அரவிந்த் குமார் - பொருந்தோட்டத்துறை
கீதா குமாரசிங்க - கலாச்சார, கலை நிகழ்வு
குணபால ரத்னசேகர - கூட்டுறவு, நுகர்வோர் பாதுகாப்பு
கபில நுவான் - சிறு பயிர்த் தோட்டம்
கயாஷான் நவனந்த - சுகாதாரம்
சுரேந்திர ராகவன் - கல்வி
காதர் மஸ்தான் - கிராமிய பொருளாதார அபிவிருத்தி
அசோக பிரியந்த -வர்த்தகம்

# நஷீர் அஹமட் அமைச்சராக சத்தியப்பிரமாணம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், அமைச்சரவை நேற்று(18) சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது

இதில், 17 பேர் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவிப்பிரமானம் செய்துகொண்டுள்ளனர்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் நஷீர் அஹமட் சுற்றாடல் துறை அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.



# தனியாக சந்தித்தார் பிரதமர் மஹிந்த

புதிய அமைச்சரவை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுக்காலை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டது. அதில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங் கேற்கவில்லை.

எனினும், அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்ட அமைச்சர்களை, அலரிமாளிகையில் வைத்து தனியாக நேற்று (18) சந்தித்தார்.

20ம் திருத்தத்துக்கு கைகளை உயர்த்தியோர்

# கைகூப்பி மன்னிப்பு கேட்க வேண்டும்

20ஐ அகற்றிக்கொண்டு 19ன் அம்சங்களை உள்வாங்கி 21ம் திருத்ததை கொண்டுவர அரசு இணங்கியுள்ளதாக இன்று கட்சி தலைவர்கள் கூட்டத்தில் சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன அறிவித்தார். இந்நிலையில் 20ம் திருத்திற்கு ஆதரவாக கையை உயர்த்தி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அதீத அதிகாரங்களை கொடுத்து, அதை நியாயப்படுத்தியும் பேசிய எம்.பிக்கள், அதே கைகளை உயர்த்தி வாக்களித்த மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டிய நிலைமை இன்று உருவாகிவிட்டது. இவ்வளவு சீக்கிரம் கோட்டாபய ராஜபக்ஷவின் சர்வதிகாரம் வீழும் என இவர்கள் கற்பனையிலும் நினைத்து



இருக்க மாட்டார்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி - தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இன்று பாராளுமன்ற வாளாகத்தில் நடைபெற்ற கட்சி தலைவர்கள் கூட்டத்தில், 20ஐ அகற்றவும், 19ன் அம்சங்களை உள்வாங்கி 21ம் திருத்த வரைபு ஒன்றை பாராளுமன்றத்துக்கு சமர்பிக்கவும் அரசாங்கம் தயார் என சபை முதல்வர் தினேஷ் குணவர்தன அறிவித்தார். இதை பிராதன எதிர்கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அகற்றும் யோசனையும் தனக்கு கிடைத்ததாக சபாநாயகர் கட்சி தலைவர்களுக்கு கூறினார். எனினும் முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அகற்றப்பட சர்வஜன வாக்கெடுப்பு நடத்திட வேண்டிவரும் என்பதால், அதற்கு நாடு இன்றைய சூழலில் தயார் இல்லை என்பதால், முழுமையாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை தற்சமயம் அகற்ற பெரும்பாலான கட்சி தலைவர்கள் ஆதரவு வழங்கவில்லை என்றார்.

# மஹிந்த பதவி விலக வேண்டும்



மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து விலக வேண்டுமென தெரிவிக்கும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, பிரதமர் பதவிக்குப் பொறுத்தமான புதியவர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், அனைத்துக் கட்சிகளும் இணைந்து அமைக்கும் தேசிய சபையில் புதிய பிரதமரை தெரிவு செய்ய வேண்டுமென நாம் ஜனாதிபதிக்குக் கடிதம் ஊடாகக் கோரியுள்ளோம். தற்போதையப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகி, பொறுத்தமான ஒருவரை பிரதமராக தெரிவு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# முதிர்ச்சியற்ற தன்மையையே வெளிகாட்டுகிறது

மக்களின் உணர்வுகளுக்கு ஜனாதிபதி மதிப்பளிப்பதாக தெரியவில்லை. நாட்டில் ஏற்றுபட்டுள்ள அத்தனைப் பிரச்சினைகளுக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டியவராக உள்ளாரென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

10 நாட்களாக காலி முகத்திடலிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஒரு பொதுவான நோக்கத்திற்காகவே தொடர்ந்து அனைவரும் போராடிவருகின்றனர்.

நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவிவருகிறது. அதேபோன்று அத்தியாவசியப் பொருட்களுக்கும் பாரிய தட்டுபாடு ஏற்பட்டுள்ளதுடன், மின்சார துண்டிப்பபு இடம்பெற்று வருகிறது. எங்கு பார்த்தாலும் மக்கள் வரிசையில் நிற்கும் காட்சிகளையே காணமுடிகிறது.எந்த பொருட்களையும் கொள்வனவு செய்ய முடியாத அளவிற்கு விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

மக்களின் பிரச்சினைகள் ஒருபுறம் இருக்கின்ற சூழலில், அமைச்சரவை மாற்றுகிறோம், அரச அதிகாரிகளை மாற்றுகிறோம் எனக் கூறி அரசாங்கம் மக்களின் போராட்டத்திற்கு தீர்வுக்கா ணாமையானது,அரசாங்கத்தி ன் முதிர்ச்சியற்ற தன்மையையே வெளிகாட்டுகிறது என்றார்.



உணர்வுகளுக்கு மதிப்பளித்து

# பதவியை மறுத்தேன்

## உண்மையை உணர்ந்து கொள்வார்கள்

■ நூருல் ஹுதா உமர்

மக்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காக அரச தரப்பின் அழைப்புகளை தான் முற்றாக நிராகரித்ததாக முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹாரீஸ் தெரிவித்தார்.

நேற்றைய தினம் (18) புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட அமைச்சரவை தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“புதிதாக ஸ்தாபிக்கப்படவுள்ள அமைச்சரவையில் அமைச்சுப் பொறுப்பை பெற்றுக் கொள்ளுமாறு, அரச மேலிடங்களிலிருந்து மூன்று தடவைகள் உத்தியோகபூர்வ அழைப்புகள் விடுக்கப்பட்டன.

“எனினும், மக்களின் பிரதிநிதி என்ற வகையில், மக்கள் பக்கமாக நின்றே செயற்பட வேண்டும் என்று தீர்மானித்தேன். எனவே, அவர்களின் அந்த அழைப்பை நான் நிராகரித்தேன்.



“இன்று மக்கள் பொருளாதார ரீதியாகவும் பல்வேறு வகையிலும் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில், எந்தவோர் அமைச்சுப் பொறுப்பையும் என்னால் ஏற்க முடியாது என அவர்களிடம் எடுத்துரைத்தேன்.

“நாட்டில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி, அதனைத் தீர்க்க வேண்டும். மக்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் நான் மக்கள் பக்கமாக நின்றே செயற்படுவேன்.

“இதேவேளை, எம்போன்றோர் தொடர்பில் இன்று பல்வேறு விமர்சனங்கள், குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால், உண்மை நிலைமையை மக்கள் விரைவில் உணர்ந்து கொள்வார்கள்” என்றார்.

## மீனவ குடும்பங்களுக்கு உலர்உணவு பொருட்கள்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடியில் 24 மீனவக் குடும்பங்களுக்கு தலா 2,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள், பூநொச்சிமுனையில் நேற்று (18) வழங்கி வைக்கப்பட்டன.

காத்தான்குடி மத்திய கல்லூரியில் 1992ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தரம் உயர் தர வகுப்பு மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது, இப்தார் நிகழ்வும் நடைபெற்றது.



காத்தான்குடி மத்திய கல்லூரியில் 1992ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தரம் உயர் தர வகுப்பு மாணவர் சமூகத்தின் தலைவரும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருமான கலீலுர் ரஹ்மான் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

## வேடிக்கையான ஒழுக்காற்று

■ ஹஸ்பர்



ஒழுக்காற்று நடவடிக்கை, முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துரைத்த அவர், “ஒழுக்காற்று நடவடிக்கை என்பது, முஸ்லிம் கட்சிகளால் வேடிக்கையாக மாற்றப்பட்டுள்ளது. இருபதாம் திருத்த சட்டத்தின் பின்னர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள். ஆனால், வழங்கப்பட்டதோ தேசிய அமைப்பாளர் போன்ற பதவிகள். மீண்டும் நிதி சட்டமூலம், வரவு - செலவு திட்டம் போன்றவற்றில் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். மீண்டும் ஒழுக்காற்று நடவடிக்கை என்றார்கள். நான்கு மாதங்களாக ஒன்றுமில்லை.

“ஆனால், இன்று அவர்கள் பசில் ராஜபக்ஷவுடன் அமைச்சுகளுக்காக பேரம் பேசிக்கொண்டிருக்கின்றனர். அமைச்சுப் பதவிகளுக்கு பேரம் பேசிக்கொண்டிருப்பவர்கள் எவ்வாறு எதிர்க்கட்சிகளுடன் இணைந்து வாக்களிப்பார்கள்.

“இது ஒன்றும் ஹக்கீமுக்கு தெரியாமலில்லை. மக்களை ஒழுக்காற்று நடவடிக்கை என்னும் பெயரில் அவரும் ஏமாற்றி வருகிறார் என்பதே உண்மை. ராஜபக்ஷர்கள் எவ்வாறு சிங்கள மக்களை ஏமாற்றி வந்தனரோ, அதேபோன்றே முஸ்லிம்களை முஸ்லிம் கட்சித் தலைவர்கள் ஏமாற்றி வருகின்றனர்” என்றார்.

## புற்றுநோயாளர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு



■ ஹஸ்பர், எப்.முபாரக்

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைகளை பெற்று வரும் தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 25 பேருக்கு, மாதாந்த கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு, தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் நேற்று (18) நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ஜே.சிறீபதி தலைமையில் இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், சமூக சேவைகள் உத்தியோகத்தர் ப.சுதன் உள்ளிட்டோர்கள் இதில் கலந்துகொண்டனர்.

இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் இக்கொடுப்பனவு 3,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டு, மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பதுக்கினால் நடவடிக்கை

■ எம்.எஸ்.எம்.ஹனீபா

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேசங்களில் எரிபொருளை சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருப்பவர்களை கைது செய்வதற்கு திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, பிரதான பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம் சதாத், நேற்று (18) தெரிவித்தார்.

இச் சோதனை நடவடிக்கையின் போது கைப்பற்றப்படும் எரிபொருள் அரச உடமையாக்கப்படுவதுடன், உரிய நபருக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபையினூடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் எரிபொருள் பதுக்கி வைத்திருப்போர்கள் சம்மந்தமாக பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனையில்

## மருந்து தட்டுப்பாடு இல்லை

■ எம்.எஸ்.எம். ஹனீபா

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடுகள் ஏற்படவில்லையென, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல். எம். றிபாஸ், நேற்று (18) தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்துகளுக்கான தட்டுப்பாடு தவிர்க்க முடியாத அளவில் ஏற்பட்டுள்ள இச்சூழலில், கல்முனை பிராந்தியத்தை பொறுத்த மட்டில் மிகுந்த சிரத்தையோடு இந்தச் சவால்மிக்க நிலைமையை, பொதுமக்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில் முகம்கொடுத்து வருகிறோம்.

வைத்தியசாலைகளில் இதுவரை மருந்து தட்டுப்பாடு ஏற்படவில்லை. அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் அதற்கான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். நோயாளிகளுக்கு கிரமமான முறையில் மருந்துகள் வழங்கப்படும்.

எவ்வாறான இடர்கள் ஏற்பட்டாலும் வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்கான சிகிச்சைகள் வழமை போன்று வழங்கப்படும்.

வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக நோயாளிகள் எவ்வித தயக்கமும் கொள்ள வேண்டாமெனவும் கேட்டுள்ளார்.

வடக்கின் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர்

# கடமைகளை ஆரம்பித்தார்

■ நிதர்ஷன், என்.ராஜ்

வடக்கு மாகாணத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜயசூர்ய கடமைகளைப் பொறுப்பேற்றார்.

காங்கேசன்துறையில் அமைந்துள்ள வட மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் நேற்று (180 காலை 8 மணிக்கு அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதன்போது மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த விஜயசூர்யவுக்கு சிறப்பு பொலிஸ் அணி வகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது.

இதனையடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், “வடக்கில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான இடைவெளியை மாற்றி அமைக்க வேண்டும்”.

“அத்துடன், வடக்கு மாகாணத்தில் நல்லிணக்கம் சமாதானத்தை ஏற்படுத்த இலங்கை பொலிஸார் என்ற அடிப்படையில் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தக் கடமையை சரிவர செய்வேன் என உறுதி கூறுகின்றேன்.

“வட பகுதியில் உள்ள மக்களுக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் செயற்படுத்த முயற்சி செய்யவுள்ளேன்.

“பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையிலான உறவுப்பாலத்தை மேம்படுத்துவது கட்டாயமாக செய்யப்பட வேண்டிய விடயம். வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் என்ற ரீதியில் இந்த விடயங்களை நான் மேற்கொள்வதற்கு தயாராக இருக்கின்றேன்.



“அத்தோடு, வடக்கு மாகாணத்தில் உள்ள பொலிஸாரின் தேவைகள் குறிப்பாக, சில இடங்களில் பொலிஸ் நிலையங்களுக்குச் சொந்த கட்டடங்கள் இல்லை. பொது மக்களின் காணிகளில் பொலிஸ் நிலையங்கள் இயங்குகின்றன. அவ்வாறான நிலையில், சில மாற்றங்களை கொண்டுவர வேண்டும்.

“குறிப்பாக பொலிஸாருக்கு தேவையான அத்தியாவசிய தேவைகள், கட்டடம், மின்சாரம் மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நான் பொலிஸ் தலைமை காரியாலயத்துடன் இணைந்து பெற்றுக் கொடுப்பதற்கு தயாராக உள்ளேன்” என்றார்.





வவுனியாவில்

## ஓட்டோக்களை பந்தாடிய வான்

### அ’புரத்தில் சிக்கியது

■ க.அகரன்

வவுனியா நகரப்பகுதியில் வேகமாக சென்ற சொகுசு வாகனம் வீதியால் பயணித்த ஓட்டோக்களை பந்தாடிவிட்டு நிறுத்தாமல் சென்றமையால் நேற்று (18) பதட்டமான சூழல் ஏற்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; ஏ9 வீதியில் யாழ்ப்பாண திசையில் இருந்து வேகமாக வந்த வான், வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபர்களை மோதித்தள்ளிவிட்டு, நிறுத்தாமல் சென்றது.

அத்துடன், வைத்தியசாலைக்கு அண்மையில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக வந்துகொண்டிருந்த இரண்டு ஓட்டோக்களையும் மோதித்தள்ளியது.

தொடர்ச்சியாக நிறுத்தாமல் சென்ற குறித்த வானின் சாரதி, இலுப்பையடிப்பகுதியில் மேலும் ஒரு ஓட்டோவை மோதித்தள்ளியதுடன், நிறுத்தாமல் தப்பிச்சென்றார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன், சம்பவ இடத்துக்கு வருகைதந்த போக்குவரத்து பொலிஸார், அந்த வானை துரத்திச் சென்றனர்.

பொலிஸாருடன் இணைந்து விசேட அதிரடிப் படையினரும் வானை துரத்திச் சென்றனர்.

அதிவேகமாக சென்ற வான், அநுராதபுரம் மாவட்டத்தின் கொறவப்பொத்தானை பகுதியில் வைத்து பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டதுடன், அதன் சாரதி கைது செய்யப்பட்டார்.

குறித்த சம்பவத்தால் வவுனியா நகரப்பகுதியில் மாத்திரம் நான்கு பேர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வானின் சாரதி மதுபோதையில் இருந்தாரா அல்லது போதைப்பொருட்கள் எதையும் கடத்திச் சென்றாரா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, குறித்த வான், கனகராயன்குளம் பகுதியில் கடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாடுகளைத் திருடி

## இறைச்சியாக்கிய இருவர் கைது

■ நிதர்ஷன்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் உள்ள பற்றைக் காணியில் வைத்து திருட்டு மாடுகள் இரண்டை சட்டத்துக்குப் புறம்பாக இறைச்சிக்காக வெட்டிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் நேற்று முன்தினம் (17) இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சுழிபுரத்தைச் சேர்ந்த 36 மற்றும் 40 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டு, வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 40 கிலோகிராம் மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு:

## முதல் கூட்டத்தில் குழப்பம்

■ செ.கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு தொடர்பான முதலாவது கலந்துரையாடலில் குழப்ப நிலை இடம்பெற்றுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கருத்தை ஒருசிலர் ஏற்றுக்கொள்ளாத நிலையில், அரசியல் கலப்படம் வேண்டாம் என அவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளார்கள்.

அத்துடன், கூட்டத்தில் கலந்துகொண்ட ஒருசிலர் முள்ளிவாய்க்காலில் 13ஐ கொண்டுவந்து கலக்கவேண்டாம் என்றார்கள். இந்த ஆண்டு, முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு தொடர்பான கலந்துரையாடலுக்கு, தமிழ்த் தெசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

அதற்கமைய, முல்லைத்தீவு வட்டுவாகல் பொதுநோக்கு மண்டபத்தில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கங்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் நேற்று முன்தினம் (17) மாலை கலந்துகொண்டுள்ளார்கள்.

இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனால், 13ஆம் திருத்தச்சட்டத்தை தீர்வாக ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை நிராகரிக்கின்ற சிவில் அமைப்புகள் ஒன்றிணைந்து நினைவேந்தலை முன்னெடுக்கவேண்டும். அதற்கான ஆலோசனை கூட்டமாகத்தான் இதனை அறிவித்துள்ளோம் என்றும் இனத்தின் இழப்புகளையும் தியாகங்களையும் அடகுவைத்துவிட்டு செல்லுகின்றபோது அதனை பார்த்துக்கொண்டிருப்பதும் தவறு; அடகு வைப்பதும் தவறு.

நினைவேந்தல் என்பது மக்கள் என்ன நோக்கத்திற்காக உயிர்கொடுத்தார்களோ அவர்களின் நோக்கம் அடையப்படுவதை அல்லது அந்த நோக்கம் குழிதோண்டி புதைப்பதை தடுக்கும் வகையில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு செயற்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலின் இறுதியில் ஒரு சிலர் குழப்பத்தை ஏற்படுத்தி வெளியேறியுள்ளார்கள்.

ஏற்கெனவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு இருக்கின்ற நிலையில், அதில் உள்ள முக்கியமானவர்கள் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நடுநிலை என்பது

# கள்ளர் கூட்டத்தை ஆதரிப்பது

**வேலுகுமார் எம்.பி சாடல்**

மக்கள் பக்கமா, கள்ளர்கள் பக்கமா? என்பதே நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிப்பதும், எதிர்ப்பதும் ஆகும். இதில் நடுநிலைமை என்பதும் கள்ளர் கூட்டத்தை ஆதரிப்பதே.. என கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.



கொழும்பில் நேற்று (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், பாராளுமன்றத்தில் உள்ள ஒவ்வொரு மக்கள் பிரதிநிதியும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க கடமைப்பட்டுள்ளனர். இதனை எதிர்ப்பது என்பது, இன்று வீதியில் இறங்கி போராடும் இளைஞர் யுவதிகளின் கருத்தை, கோஷத்தை ஏளனப்படுத்தி, நாட்டைப் புறந்தள்ளி, மக்களைப் புறந்தள்ளி, தமது சொந்த நலனுக்காக செயற்படுவதாகும். இன்று முழு நாடும் போராட்ட களமாக மாறியிருக்கின்றது. நாளுக்கு நாள் பொருளாதாரம் மீள கட்டியெழுப்ப முடியாத அதளபாதாளத்திற்கு சென்றுகொண்டிருக்கிறது. பொருட்களின் தட்டுப்பாடு, விலையேற்றம் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு அதிகரித்துக்கொண்டு இருக்கின்றது. இவற்றுக்கு உடனடி தீர்வு அவசியம். மக்கள் கேட்பது, ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்; அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டும்; புதியதோர் இடைக்கால அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்ட வேண்டும் என்பதாகும். அதற்கான உத்தியோகபூர்வ ஆரம்பமே, அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஆகும்.

அரசாங்கத்தை வீட்டுக்கனுப்ப வீதிகளில் மக்கள் போராடுகின்ற போது, அதற்கு மதிப்பளித்து, அரசியல் அமைப்பிற்கமைய, பாராளுமன்றத்தில் நாம் அரசை வீட்டுக்கு அனுப்பும் வேலையை செய்ய வேண்டி இருக்கின்றது. அதற்காக நம்பிக்கையில்லா பிரேரணை முன் வைக்கப்பட்டிருக்கின்றது என்றார்.








# சாபத்தை இல்லாதொழிப்போம்

75 வருட சாபத்தை இல்லாதொழிப்போம் எனும் தொனிப்பொருளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், பதுளை நகர மத்தியில் நேற்றுமுன்தினம் (17) மாலை முன்னெடுக்கப்பட்டது. இரவு வரை தொடர்ந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், இனம், மதம் பேதமின்றி பெருந்திரளானோர் கலந்துகொண்டனர். (பாலித ஆரியவன்ஸ)



அமரர் பெ.சந்திரசேகரனின்

# 65ஆவது பிறந்ததினம்

**நிலமேகம் பிரசாந்த்**

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகர் அமரர் பெ.சந்திரசேகரனின் 65ஆவது ஜனன தின நிகழ்வு, முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஸ்ணன் தலைமையில், கொட்டகலை புஸ்பா விருந்தகத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) நடைபெற்றது.

இந்நிகழ்வில், ம.ம.முன்னணியின் செயலாளர் நாயகம் பேராசிரியர் எஸ். விஜயசந்திரன், மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச்செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# தனிநபர் போராட்டத்துக்கு ஆதரவு அதிகரிப்பு



**காஞ்சனகுமார ஆரியதாச**

தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு தெரிவான உறுப்பினர்களை நீக்கிவிட்டு, நாட்டில் உள்ள புத்திசாலிகளைக் கொண்ட அமைச்சரவையை நியமிக்குமாறு வலியுறுத்தி, தம்புள்ளை நகர மத்தியில் தனி மனித போராட்டம் நேற்று (18) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ள பிரதேசத்தில் பிரத்தியேக வகுப்புகளை நடத்தி வரும் ஆசிரியரான இவர், தனது காரை நகரின் மத்தியில் நிறுத்தி விட்டு, அதன் மீதேறி, எதிர்ப்பு பதாகைகளைக் காட்சிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

தனிநபர் போராட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இவரது போராட்டத்துக்கு, இளைஞர்கள் பலர் ஆதரவு தெரிவித்து, அந்த இடத்தில் ஒன்று கூடத் தொடங்கியுள்ளனர்.

ஹட்டனில் நேற்றும்

# எரிபொருள் வரிசை

**ரஞ்சித் ராஜபக்ஷ**

ஹட்டன் நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல், டீசலுக்கான தட்டுப்பாடு தொடர்ந்து காணப்படுவதால், நேற்றும் பலர் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளனர்.



தமக்கான எரிபொருள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில், நேற்று அதிகாலை தொடக்கம் எரிபொருள் நிரப்பு நிலையங்களை அண்மித்த பகுதிகளில் வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்றிருந்தன.

ஹட்டனிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு போதியளவு எரிபொருள் நேற்றுமுன்தினம் (17) கிடைத்துள்ளது. இந்நிலையில், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்குமாறு, எரிபொருள் கூட்டுத்தாபனம் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் எரிபொருள் நிலைய முகாமையாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் மீண்டும் எத்தனை நாள்களுக்குப் பிறகு தமது எரிபொருள் நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்படும் என்பது தமக்கே தெரியாதென்றும் முகாமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மூடியிருந்த ஹோட்டலில் தீ

**சேஹ்ன் செனவிரத்ன**

கண்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள ஹோட்டலொன்றின் மூன்றாம் மாடியில் ஏற்பட்ட தீபரவல், கண்டி மாநகர சபையின் தீயணைப்பு படையினரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (17) மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தாண்டு விடுமுறையையொட்டி, குறித்த ஹோட்டல் சில நாள்களாக மூடப்பட்டிருந்ததாகவும் இதன்போது, மூன்றாம் மாடியில் புகை வருவதை அவதானித்த நபர் ஒருவர், கண்டி மாநகர சபையின் தீயணைப்பு படையினருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து விரைந்த தீயணைப்பு படையினர், தீ ஏனைய இடங்களுக்கு பரவாமல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இது தொடர்பான விசாரணைகளை கண்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# உலருணவுப் பொதிகள் வழங்கி வைப்பு



**இக்பால் அலி**

கண்டி மாவட்டத்திலுள்ள விதவைத் தாய்மார்களுக்கு நோன்பு கால உலருணவுப் பொதிகள், மாத்தளை வீதியிலுள்ள சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானத்தில் வைத்து, வழங்கி வைக்கப்பட்டன.

புனித நோன்பு மாதத்தையொட்டி, வை. எம். எம். ஏ. பேரவையால் நாடளாவிய ரீதியில் 7,500 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்படுகின்றன.

அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தலைவர் சஹீட் எம் ரிஷ்மியின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாத்தளை மாவட்ட வை. எம். எம். ஏ பேரவையின் மாவட்டப் பணிப்பாளர்களான பௌஸ் ஏ. காதர், கண்டி மாவட்ட பணிப்பாளர் இஹ்திசாம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஒரே மேடையில்

# 100 இற்கும் மேற்பட்டோருக்கு கௌரவம்

**மலைவாஞ்ஞன்**

அக்கரப்பத்தனை பகுதியில் உள்ள முன்பள்ளிகளில் கல்வி பயின்று பாடசாலைகளுக்கு செல்லவிருக்கும் சிறார்களை கௌரவித்து, அவர்களின் கலை கலாசார அம்சங்களை வெளிக்கொணரும் நிகழ்வு, மன்றாசி நிசாந்தினி மண்டபத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்றது.

இதன்போது 16 முன்பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 97 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர். பதக்கம் அணிவித்து, சான்றிதழ் வழங்கி அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், இவர்களை பயிற்றுவித்த முன்பள்ளி ஆசிரியர்களும் இதன்போது பொன்னாடை அணிவித்து நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் ஊடகவியலாளர்கள் , சமூக சேவையாளர்கள், வைத்தியர்கள், அரசியல் பிரமுகர்கள், சமயப்பணியில் ஈடுபட்டவர்கள் மற்றும் பல்வேறு துறைச்சார்ந்தவர்கள் இதன்போது பொன்னாடையணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

பிரிடோ நிறுவனத்தின் இணைப்பதிகாரி கே.புஸ்பராஜின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, லிந்துலை பொது சுகாதார வைத்திய அதிகாரி துரைராஜ் வெஸ்மி, பிரிடோ நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் சந்திரசேகரம், மதத்தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் ஆசிரியர்கள் அதிபர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# பவுசர் விலகியதால் விநியோகம் தாமதம்

**ராமு தனராஜா**

சிபெட்கோ எரிபொருள் நிலையத்துக்குச் சொந்தமான எரிபொருள் பவுசர் ஒன்று, பதுளை -பண்டாரவளை பிரதான வீதியின் உடகும்பல்வெல பகுதியில் வீதியை விட்டு விலகி நேற்று (18) அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பில் இருந்து பதுளைக்கு எரிபொருளை ஏற்றிச் சென்ற போதே, இந்த விபத்து நேர்ந்துள்ளது.



இதனால் பதுளையில் உள்ள எரிபொருள் நிலையங்களுக்கு, எரிபொருள் கிடைப்பது மேலும் தாமதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்மாதிரியான பொலிஸ் உத்தியோகத்தர்

**மலையக நிருபர்கள்**

இரண்டு இலட்சத்துக்கு 17 ஆயிரம் ரூபாய் பணத்துடன் கீழே விழுந்து கிடந்த பணப் பையை கண்டெடுத்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், பணத்துடன் அந்தப் பணப்பையை உரிமையாளரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தார்.

நுவரெலியா, ஹக்கல சீதையம்மன் கோவில் வளாகத்தில் சனிக்கிழமையன்று (16) கடமையில் ஈடுபட்டிருந்த நுவரெலியா பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தரான ஆனந்த கிரிஷான் குணரத்ன, பணப் பையின் உரிமையாளரை கண்டுப்பிடித்து கொடுத்துள்ளார்.

# களைந்தபின் ஆடை தேடின் நிர்வாணமாகத்தான் அலைய வேண்டும்

முன்பின் யோசித்து, தீர்க்கதரிசனத்துடன் தீர்மானங்களை எடுக்காவிடின், பிரச்சினைகளுக்கு மேல் பிரச்சினைகள் வந்துகொண்டேதான் இருக்கும். அவற்றைத் தீர்ப்பதற்காக, அவ்வப்போது முடிவுகளை மாற்றவேண்டிவரும். அந்த நிலைமைதான் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் அனைவரும், இரண்டு வாரங்களுக்கு முன்னர் இராஜினாமாச் செய்தனர். அதன்பின்னர், சிலர் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக்கொண்டனர். அப்போது, பாராளுமன்றத்தை கொண்டு நடத்தவே நியமனம் வழங்கப்பட்டதாக விளக்கம் சொல்லப்பட்டது.

அவ்வாறு விளக்கம் சொன்னவர்களில் பலர், நேற்றைய அமைச்சரவை நியமனங்களின் போது, அமைச்சுப் பொறுப்புகளை ஏற்க மறுத்துவிட்டனர். அரசாங்கத்துக்கு எதிரான குரல்கள் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில், அமைச்சரவை மாற்றத்தைப் பார்க்குமிடத்து, சர்வதேசத்துக்கும் நிதியுதவிகளை வழங்கும் நிறுவனங்களுக்கும் 'பூச்சாண்டி' காட்டுவதாகவே அமைந்துள்ளது. அல்லது, வாயைப் பொத்திக்கொண்டு அமைதியாய் இருப்பவர்களுக்கு பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஏனெனில், அமைச்சரவைக்குள் தாங்கள் முன்வைக்கும் கருத்துகளுக்கு செவிசாய்ப்பதில்லை எனக் குற்றஞ்சாட்டிய விமல், கம்மன்பில ஆகியோர் அரசாங்கத்திலிருந்து விலக்கப்பட்டிருந்தனர். ஸ்திரமான அரசாங்கம் இருக்கிறது என்பதைக் காண்பிக்க, காத்திரமானவர்களையும் சர்வதேச நிறுவனங்களுக்கு பதிலளிக்கக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்களையும் கொண்டே அமைச்சரவையை நிறுவியிருக்கவேண்டும்.

இது, இருக்கும் ஆடையை களைந்துவிட்டு, ஆடையை தேடிக்கொண்டிருக்கும் செயலாகும். இதனால், நிர்வாணமாகவே அலைய வேண்டிவரும் என்பது மட்டுமே உண்மையாகும். சிலவேளைகளில், எதிர்க்கட்சியினரால் பாராளுமன்றத்தில் எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாது, திணறவேண்டிய நிலைமையும் ஏற்படலாம்.

பிரச்சினைகள் கைமீறிச் சென்றிருக்கும் நிலையில், காத்திரமான தீர்மானங்களை எடுத்து, நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம். அதைவிடுத்து, அமைச்சரவையை நியமிக்கவேண்டும் என்பதற்காக, 'பூச்சாண்டி' காட்டக்கூடாது. இது, பிரச்சினையை சிக்கலாக்கும்.

குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்ற கோஷங்களும் வலுப்பெற்றுள்ளமையால், இரண்டு ராஜபக்ஷர்களைத் தவிர, ஏனைய ராஜபக்ஷர்கள் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படவில்லை என்ற வியாக்கியானத்தை, ராஜபக்ஷர்களுக்கு சார்பானோர் முன்வைக்கலாம். இவை இன்றைய காலக்கட்டத்தில் செல்லாக் காசாகும்.

இனவாதம், மதவாதம், புலிப்புராணம், ஆகிய பழைய பல்லவிகளை எந்நாளும் பாடிக்கொண்டிருக்க முடியாது. காலவோட்டத்துக்கு ஏற்றவகையில் திருத்தங்களை மேற்கொள்ளல் அவசியம். அமைச்சரவை மாற்றத்துக்குப் பின்னர், புதிய அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் பொதுவெளியில் பேசப்படுகின்றது.

'நிறைவேற்றதிகார ஜனாதிபதி' எனும் கனவோடு இருப்போருக்கு, அது கசப்பானதாக இருந்தாலும். இன,மத,மொழி பேதங்களுக்கு அப்பால் சென்று, சகல பிரச்சினைகளையும் தீர்க்கும் வகையில், குறுகியகாலத்துக்குள் திருத்தங்களை மேற்கொள்வதே உசிதமானது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



காலி முகத்திடல் முற்றுகை:

# செவிசாய்க்காத அரசாங்கம்

மொஹமட் பாதுஷா

நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னொருபோதும் இல்லாத பொருளாதார பின்னடைவுகள், அரசியல் நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளன. அரசியலை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை ஒன்றின் ஊடாகவே, பொருளாதார நெருக்கடிகளையும் தீர்த்தாக வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால், பொருளாதார வீழ்ச்சியைப் போலவே, மக்கள் போராட்டத்தையும் அரசாங்கம் குறைமதிப்பீடு செய்திருக்கின்றது. அதனால், பக்குவமற்ற விதத்தில் நிலைமைகளைக் கையாள்வதை, வெளிப்படையாகவே காணக் கூடியதாகவுள்ளது.

பொருளாதாரம் 'வங்குரோத்து' நிலைக்கு வரும் வரைக்கும், அதில் ஏற்பட்ட பின்னடைவுகளைத் தடுப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கவில்லை. மாறாக, இன்று வரைக்கும் நாணயத்தாள்களை அச்சிடுதல் போன்ற எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும் கைங்கரியங்களிலேயே ஈடுபட்டுள்ளது. அதே பாணியிலேயே, அரசுக்கு எதிரான வெகுஜனப் போரட்டங்களையும் அரசாங்கத்தின் தலைமைகள் கையாளப் பார்க்கின்றன.

எல்லா மட்டத்திலும் உள்ள படித்த, சாதாரண மக்கள் எல்லோரும் வீதிக்கு இறங்கி, பல நாள்களாகப் போராடி வருகின்ற சூழலிலும் கூட, இந்தத் தலையிடிக்கு நிரந்தர மருந்தைத் தேடுவதை விடுத்து, தலையணையை மாற்றுகின்ற வேலைகளைச் செய்து, வழக்கம் போல காலத்தை கடத்தலாம் என ராஜபக்ஷவினர் நினைக்கின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை, இரு கோணங்களில் பார்க்க வேண்டியுள்ளது.

முதலாவது, கொரோனா வைரஸ் பரவலுக்குப் பின்னராக, உலகளவில் ஏற்பட்ட பொருளாதார இடர்பாடு, ரஷ்யா - உக்ரேன் யுத்தத்துக்குப் பிறகு, உலக சந்தையில் ஏற்பட்டுள்ள தளம்பல்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்தப் பின்னணியில், கோட்டாபய அரசாங்கத்தின் தீர்மானங்கள், இலங்கை நெருக்கடியை இன்னும் தீவிரப்படுத்தியுள்ளன.

இரண்டாவதாக, இலங்கை விவகாரத்தை புவிசார் அரசியல் நகர்வுகளின் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டியுள்ளது. சீனா, இந்தியா, அமெரிக்கா என்ற மூன்று பலம்வாய்ந்த நாடுகள் இலங்கை பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துகின்றன. அதுமட்டுமன்றி, இலங்கை என்ற வளம்மிகு நாட்டின் வளங்களை, தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க கனவு காண்கின்றன.

அந்த வகையில், இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி என்பது நூறு சதவீதம் இயற்கையான, தற்செயலான காரணிகளின் வழிவந்ததா என்ற சந்தேகம் நோக்கர்களுக்கு ஏற்பட்டுள்ளது, ஆனாலும், இந்த நெருக்கடிகளை, ஆட்சியாளர்களான ராஜபக்ஷர்கள் சரிவரக் கையாளத் தவறியிருக்கின்றார்கள் என்ற கோணத்தில், ஒட்டுமொத்த மக்கள் வெறுப்பும் அவர்கள் மீது குவிக்கப்பட்டுள்ளது.

இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கும் அரசியல் குழப்பங்களுக்கும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் ஒரு முக்கிய காரணமாக கருதப்படுகின்றது. எது எப்படியிருப்பினும், இன்றைய நெருக்கடியின் மூல காரணங்கள் என்ன என்பதை ஒருபுறம் வைத்துவிட்டு. நிகழ்கால பொருளாதார, வாழ்வாதார பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காண வேண்டிய பாரிய பொறுப்பு, ராஜபக்ஷ அரசாங்கத்துக்கும் அதனை ஒழுங்குபடுத்த வேண்டிய தார்மிகப் பொறுப்பு எதிர்க்கட்சிக்கும் உள்ளது.

ஆனால், அரசாங்கம் மக்கள் போராட்டத்தின் காரணமாக உள்ளுக்குள் நடுங்கிக் கொண்டிருக்கின்ற போதிலும் கூட, வெளியில் மிக தைரியமாக, பலமாக இருப்பதாக காட்டிக் கொள்வதற்கான அணுமுறைகளைக் கையாள்கின்றது. பிரதான எதிர்க்கட்சியும் ஏனைய எதிரணிகளும் கூட, இது விடயத்தில் நம்பிக்கை தரும் நகர்வுகளைச் செய்யவில்லை.

ஆட்சியைப் புரட்டுவதற்கு இப்போது ஒன்றுமில்லை. ஏனெனில் ஆட்சியே கிட்டத்தட்ட அந்த நிலையில்தான் உள்ளது. இந்தத் தருணத்திலாவது ஆட்சி அதிகாரத்தை சஜித் பிரேமதாஸவோ, ரணில் விக்கிரமசிங்கவோ, மைத்திரியோ, அநுரகுமாரவோ கையிலெடுக்கும் விரைவான காய்நகர்த்தல்களை மேற்கொள்ளவில்லை.

அதேபோல், ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று, இடைக்கால அரசாங்கம் ஒன்றில் இணைந்து கொள்ளவும் இல்லை. மறுபுறத்தில், சுயாதீனமாகச் செயற்படப் போவதாக கூறிய சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கும் என்று நம்புவதற்கும் இல்லை.

ஆக மொத்தத்தில், எல்லாப் பக்கத்திலும் உள்ள அரசியல்வாதிகள் மக்களைக் கைவிட்டுள்ளனர். ஆட்சியாளர்களால், அரசியல்வாதிகளால் தோற்றுவிக்கப்பட்ட இத்தனை நெருக்கடிகளும் பிரச்சினைகளும் இன்று மக்களின் தலையில் கட்டப்பட்டு உள்ளன. மக்கள்தான் வீதிக்கு இறங்கி, எல்லாவற்றையும் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த மக்கள் போராட்டங்கள், இலங்கை சூழலில் என்றுமில்லாத பல மாற்றங்களை உண்டு பண்ணியிருக்கின்றன. இதில் முதலாவது விடயம், 'இலங்கையர்' என்ற ஒற்றுமையாகும். அதாவது, சிங்களவர், முஸ்லிம், தமிழர் மட்டுமன்றி வேடுவர்களும் தமது இன, மத பேதங்களை மறந்து நாட்டுக்காக முன்னே வந்துள்ளனர்.

இனவாதம் என்பது, அரசியல் தரப்பினரால் காலத்துக் காலம் உருவேற்றப்பட்ட ஒரு 'பேய்' என்பதையும் அடிப்படைவாதம், பயங்கரவாதம் என்பதெல்லாம் 'பிச்சைக்காரனின் புண்ணைப் போல' கையாளப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பாக சிங்கள மக்கள் இப்போது விளங்கிக் கொண்டுள்ளனர்.

இந்தக் காரணங்களைச் சொல்லி, ஆட்சியாளர்கள் மக்களைப் பிரித்து ஆண்டதன் விளைவுதான் இது என்பதை எல்லா இன மக்களும் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு, இன்றைய பொருளாதார நெருக்கடி ஒரு களத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. இது ஒரு முக்கிய மாறுதல் ஆகும்.

அடுத்ததாக, ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களை நோக்கி, நேரிடையாகவே கேள்வி கேட்கும் துணிச்சலும் ஆற்றலும் இலங்கை மக்களுக்கு வந்திருக்கின்றது. எம்.பிக்கள், அரசியல்வாதிகள் செய்வதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்த காலம் மலையேறி இருக்கின்றது. இப்போது ஜனாதிபதியைக் கூட அவரது அலுவலக வாசலுக்குச் சென்று, தட்டிக் கேட்கும் முக்கியமான மாற்றமொன்று ஏற்பட்டிருக்கின்றது.

இது, ராஜபக்ஷர்கள் மட்டுமன்றி, ஏனைய எதிர்க்கட்சியின் முக்கிய தலைவர்கள் கூட எதிர்பார்த்திராத ஒன்றாகும். இந்த மாற்றம், இனி வரும் ஆட்சியாளர்களும் தவறு செய்ய முன்னர் ஒரு கணம் யோசிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தும் எனலாம்.

இவையெல்லாவற்றையும் விட, மிகவும் அமைதியாகவும் நாகரிகமான முறையிலும் ஜனநாயக வழிமுறைகளின் ஊடாகவும் தமது கோரிக்கைகளை முன்வைக்கும் ஒரு முன்மாதிரி ஆர்ப்பாட்ட கலாசாரத்தை, காலி முகத்திடல் முற்றுகை ஆரம்பித்து வைத்திருக்கின்றது.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் போடப்பட்டுள்ள தடுப்பு வேலியில் ஏறி நிற்கின்ற இளைஞர்களுக்கும் அங்குள்ள பல்லாயிரக்கணக்கான போராட்டக் காரர்களுக்கும், அந்தத் தடுப்பு வேலியை உடைத்துக் கொண்டு உள்ளே போவது பெரிய விடயமல்ல; ஆனால், அதனை அவர்கள் செய்யவில்லை.

ஏனெனில், சட்டத்துக்குக் கட்டுப்பட வேண்டுமென அவர்கள் நினைக்கின்றார்கள். வன்முறையற்ற வழிமுறைகளில் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என எண்ணுகின்றார்கள். இந்த நாட்டு மக்களுக்காக, தாம் முன்வைக்கின்ற கோரிக்கை, அங்குள்ள ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அதிகார வர்க்கத்தின் காதில் விழும்; அவர்கள் நல்ல பதிலை வழங்குவார்கள் என இன்னும் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள்.


ஆனால், அரசாங்கம் இதன் தார்ப்பரியத்தை புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. காலி முகத்திடலில் நிற்பவர்கள், நாடெங்கும் சிறியளவில் போராடிக் கொண்டிருக்கும் மக்களின் பிரதிநிதிகள் என்பதை அறிந்து, ஆட்சியாளர்கள் மக்களின் குரலுக்கு செவிசாய்த்ததாகத் தெரியவில்லை.

மாறாக, வழக்கமாக அணுகுமுறைகளின் ஊடாக, ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு சில சிறுபிள்ளைத்தனமான நகர்வுகளைச் செய்வதையே காண முடிகின்றது. ஒருவேளை, ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையைக் கையில் எடுத்திருந்தால், அது எப்போதோ நடந்திருக்கும். அல்லது, சர்வதேச நாணய நிதியம் போன்ற உலக அமைப்புகளின் உதவி, இந்த நேரத்தில் தேவை இல்லாதிருந்தாலும் அதைச் செய்திருப்பார்கள்.

எது எவ்வாறாயினும், இந்தப் பிரச்சினையை சமாளிக்க, தீர்வுகள் என்ற பெயரில் தலையணைகளை மாற்றி, மக்களைப் பேய்க்காட்டிவிட்டு, காலத்தை இழுத்தடிக்கவே அரசாங்கம் முனைகின்றது. இதன் ஓர் அங்கமாகவே நேற்றைய அமைச்சரவை நியமனமும் இடம்பெற்றுள்ளது.

இதைவிட, இடைக்கால அரசாங்கம் அமைக்க, எதிரணியில் உள்ளவர்கள் ஓடோடி வரவில்லை என்பதும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் நல்ல சாட்டாகியுள்ளது.

இத்தனை விமர்சனமும், அவமானங்களும் ஏற்பட்டு, ராஜபக்ஷர்களின் 'இமேஜ்' உலகில் சிதைந்து கொண்டிருக்கின்ற போதும், இவர்கள் திருந்தவும் இல்லை; தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்ளவும் இல்லை. ஒரு தவறை சரிப்படுத்த, இன்னும் பல தவறுகளை செய்கின்ற பாணியிலான போக்கானது, ஒருநாளும் நல்ல பெறுபேறுகளைத் தந்ததில்லை என்பதே உலக அனுபவமாகும்.



## வாழ்வியல் தரிசனம்

எந்தப் பெரிய வேலைகளையும் சுலபமாக முடித்துவிடுவேன் எனச் சூளுரைப்பவர்களை நம்பி ஒரு கருமத்தை ஒப்படைத்தால், அவர்கள் ஒன்றுமே செய்யாமல் நழுவி விடுவார்கள்.

இவர்களில் சிலர் பணத்தை வாங்கிவிட்டுப் போவதுமுண்டு. அதிகமான பணத்தை முதலீடு செய்து, கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்கும் போது, மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எவரையும் தெரியாதவிடத்து, அவர்களிடம் வேலையை ஒப்படைத்தல், பாதுகாப்பு அற்றதாகும்.

நம்பிக்கையும் வேலைத்திறனும் உள்ளவர்களிடத்தில் திட்டமிட்டு, ஒப்பந்தம் செய்த பின்னரே, கருமங்களையும் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தையும் ஒப்படைக்க வேண்டும்.

பொல்லாத உலகில் மக்கள் படும் வேதனைகளுக்கு மத்தியில், எத்தர்கள் நுழைந்தால் மக்களின் நிலை என்ன? ஒவ்வொரு வினாடியும் மனிதன் எச்சரிக்கையுடன் வாழவேண்டும்.

கொடுத்த பணத்தைக் கேட்டால், கோவப்பட்டு, பின்னர் அதைத் தராமலே போய்விடுகின்றனர். நேர்மை, நீதியுடன் வாழ்வோர் துணிச்சலுடனும் எச்சரிக்கையுடனும் இருக்கவேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஆபத்தான நிலையில் வட்டுவாகல் பாலம்

முல்லைத்தீவு, ஏ-35 பிரதான நெடுஞ்சாலையில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலமானது, சேதமடைந்து பாரிய உடைவுகளுடன் ஆபத்தான நிலையில் காணப்படுவதால் போக்குவரத்துகளில் அடிக்கடி இடையுறுகளும் விபத்துகளும் ஏற்படும் அபாய நிலையும் காணப்படுகின்றது.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் வீதியில், பிரதான பாலமாக வட்டுவாகல், நந்திக்கடல் பாலம் அமைந்திருக்கின்றது. அத்துடன் வடக்கு - கிழக்கு இணைப்பு க்கான மார்க்கமாகவும் அமைந்துள்ளது.

முல்லைத்தீவு நகரத்துக்கான பிரதான பாதைகளில் ஒன்றாகக் காணப்படுகின்ற ஏ-35 வீதியின் வட்டுவாகல் பாலம், 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைக்கப்பட்ட போதிலும் கடந்த 72 வருடங்களுக்கு மேலாக, எந்தவித புனரமைப்புகளுமின்றி சேதமடைந்து காணப்படுகிறது. இவ்வாறு சேதமடைந்து காணப்படும் பகுதிகள், அடிக்கடி தற்காலிகமாகப் புனரமைப்புச் செய்யப்படுகின்றன. தற்போது பாலத்தின் மையப் பகுதியில் உடைவுகள் ஏற்பட்டு, ஆபத்தான நிலையில் உள்ளது.

குறித்த பாலத்துக்குப் பதிலாக, புதிய பாலத்தை அமைத்துத்தருமாறு, தொடர்ச்சியாக பல்வேறு தரப்பினராலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இது தொடர்பாக எந்தவித முன்னகர்வுகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, நீண்ட காலம் இவ்வாறு சேதமடைந்து காணப்படுகின்ற பாலத்தை அவசர நடவடிக்கையாகக் கருதி, முதலில் புனரமைத்து, பாதுகாப்பாகப் பயணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்கான காரியங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

–யது பாஸ்கரன்

புதுடெல்லி

# உக்ரேனில் இருந்து இந்தியா வந்த மாணவர்கள் போராட்டம்

ரஷ்யா-உக்ரேன் போர் காரணமாக, படிப்பை இடைநடுவில் கைவிட்டுவிட்டு இந்தியா திரும்பிய மருத்துவ மாணவர்கள், இந்தியாவிலுள்ள கல்லூரிகளில் சேர அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று புதுடெல்லி யில் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ரஷ்யா-உக்ரேன் போரின் காரணமாக, உக்ரேனில் மருத்துவ கல்வி பயின்ற மாணவர்கள், அவர்களுடைய படிப்பை தொடர முடியாத சூழ்நிலை உருவானது. இதனால் மாணவர்கள் அனைவரையும் மத்திய அரசு இந்தியாவுக்கு பாதுகாப்பாக அழைத்து வந்தது.

இந்நிலையில், இந்தியாவின் 18 மாநிலங்களைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட மாணவர்கள், புதுடெல்லியில் தங்களுடைய பெற்றோருடன் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தியாவில் உள்ள மருத்துவ கல்லூரிகளில் சேர்ந்து படிப்பை தொடர அரசு அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.




போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களின் பெற்றோர் கூறியதாவது, “மத்திய அரசு, மாணவர்களை போர்ச் சூழலில் இருந்து பாதுகாப்பாக மீட்டு வந்தது போல, அவர்களின் எதிர்காலம் பாதிக்காமல் இருக்க உதவ வேண்டும்” என்றனர்.

# அனுபமாவின் அரபிக்குத்து



விஜய் நடித்த ‘பீஸ்ட்’ திரைப்படம் வெளியாவதற்கு முன்பே கடந்த மாதம் வெளியான ‘அரபிக்குத்து’ பாடல் பட்டி தொட்டியெல்லாம் ஒலிக்கும் அளவுக்கு ரசிகர்களிடம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.

ரசிகர்கள் மட்டுமல்லாது திரையுலக பிரபலங்களும் சில கிரிக்கெட் வீரர்களும் கூட அந்த பாடலுக்கு நடனமாடி அந்த வீடியோக்களை சமூகவலைத்தளங்களில் வெளியிட அவையும் வைரலான நிகழ்வுகளும் நடந்தது.

இந்த நிலையில் பிரேமம் புகழ் நடிகை அனுபமா பரமேஸ்வரன் ‘அரபிக்குத்து’ பாடலுக்கு நடனமாடி அந்த வீடியோவை தனது சமூகவலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். இதற்கு ஒரு மில்லியனுக்கு அதிகமான லைக்குகள் கிடைத்துள்ளன.

அண்மையில் சித்திரை விஷு கொண்டாட்டமாக கேரளாவின் பாரம்பரிய உடையை அணிந்து கைகளில் மலர்களை வைத்தபடி இந்த பாடலுக்கு ஆடியுள்ள அனுபமா பரமேஸ்வரன், விஷு சத்யா உற்சாக கொண்டாட்டத்தில் ஒரு சிறு பகுதியாக இந்த பாடலுக்கு ஆடியதாக கூறியுள்ளார்.

லடாக்

# இந்திய எல்லை அருகில் கோபுரங்களை நிறுவிய சீனா



இந்திய எல்லைக்கு மிக அருகே மூன்று அலைபேசி கோபுரங்களை சீனா நிறுவியுள்ளதாக, லே மாவட்டத்தின் உள்ளூராட்சி உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இந்தியா - சீனா இடையே லடாக் எல்லையில் இரு நாடுகளுக்கும் பிரச்சினைகள் தொடர்ந்து வருகிறது. பலகட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்றாலும், பிரச்சினைகள் தொடர்கின்றன.

இதற்கிடையே, எல்லைப் பகுதியில் கட்டமைப்பு பணிகளை சீனா மேற்கொண்டு வருகிறது. கிழக்கு லடாக்கில் உள்ள பாங்கோங் ஏரி மீது, சட்டவிரோதமாக சீனா பாலம் கட்டியது. இந்தப் பாலம் பாங்கோங் ஏரியின் வடக்கையும் தெற்கையும் இணைப்பதாக உள்ளது. இதற்கு மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இந்திய எல்லைக்கு மிக அருகில் சீனா மூன்று அலைபேசி கோபுரங்களை அமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சில மாதங்களாக எல்லையில் சீனாவின் அத்துமீறல் தொடர்ந்து வரும் சூழலில், இந்தக் கோபுரங்கள் அமைக்கப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுடெல்லி

கொரோனா பலி கணக்கீடு முறை

# உலக சுகாதார அமைப்பிடம் இந்தியா கேள்வி

உலகம் முழுதும் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியது முதல், அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் குறித்த விவரங்களை, உலக சுகாதார அமைப்பு வெளியிட்டு வருகிறது.

16ஆம் திகதிய ‘நியூயோர்க் டைம்ஸ்' நாளிதழில் வெளியான உலக சுகாதார அமைப்பின் அறிக்கையில், 2021 வரை, உலகில் 1.5 கோடிக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாக கூறப்பட்டிருந்தது. இந்தியாவில் மட்டும் 40 இலட்சம் பேர் இறந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டு இருந்தது. மேலும், உயிரிழப்புகளின் தரவுகளைச் சேகரிக்க கால தாமதம் ஆனதாகவும், அதற்கு இந்தியாவே காரணம் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலடி கொடுத்து, மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: கணிதவியல் கோட்பாடுகள் அடிப்படையில், கொரோனா மரணங்களை கணக்கிடும் உலக சுகாதார அமைப்பின் நடைமுறை, இந்தியாவுக்கு ஏற்புடையதாக இல்லை.

இந்தியா போன்ற அதிக மக்கள் தொகையும், வெவ்வேறு புவியியல் அமைப்பும் உடைய ஒரு நாட்டில், இந்த முறையில் மரணங்களை கணக்கிடக் கூடாது. துனிசியா போன்ற சிறிய நாடுகளுக்கு பயன்படுத்தப்படும் அதே நடைமுறையில், 130 கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை உடைய இந்தியாவிலும் மரணங்களை கணக்கிடுவது சரியாக இருக்காது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# சிங் இன் த ரெயின்

நீண்டஇடைவெளிக்குப் பிறகு பிரபுதேவா, வடிவேலு சந்தித்த வீடியோ சமூக வலைத்தளத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது.

பிரபுதேவா, வடிவேலு நடிப்பில் வெளியான திரைப்படம் ‘மனதைத் திருடி விட்டாய்’. அந்தத் திரைப்படத்தில் பிரபுதேவா, வடிவேலு, விவேக் ஆகியோர் நகைச்சுவையில் அசத்தி இருப்பார்கள்.

இந்தத் திரைப்படத்தில் இடம்பெற்ற நகைச்சுவைக் காட்சிகளைப் பார்ப்பவர்களால் சிரிக்காமல் இருக்க முடியாது. அதிலும் ஒரு காட்சியில் வடிவேலு, ‘சிங் இன் த ரெயின், ஐ வான்ட் சிங் இன் த ரெயின்’ என்று பாடி நடிக்கும் காட்சியை யாராலும் மறக்க முடியாது.

இந்தநிலையில் பிரபுதேவா, வடிவேலு தற்போது சந்தித்த வீடியோ ஒன்று வெளியாகியுள்ளது. அதில் வடிவேலு ‘சிங் இன் த ரெயின்’ பாடலைப் பாடி, பிரபுதேவாவைக் கட்டிப் பிடித்து மகிழ்ந்துள்ளார். ‘நட்பு’ என ஒரே ஒரு வார்த்தையில் அந்த சந்திப்பு பற்றி பதிவிட்டுள்ளார் பிரபுதேவா.



# வருத்தத்தில் பூஜா ஹெக்டே

10 வருடத்துக்கு முன்பே ‘முகமூடி’ என்கிற தமிழ் திரைப்படத்தில் தான் பூஜா ஹெக்டே முதன்முறையாக கதாநாயகியாக அறிமுகமானார்.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அந்தத் திரைப்படம் மிகப்பெரிய தோல்வியை தழுவியதால் அதன்பிறகு தமிழில் பூஜாவுக்கு படவாய்ப்புகள் வரவில்லை.

அதுமட்டுமல்ல முதல் திரைப்படமே தோல்வி என்கிற அந்த முத்திரையை உடைத்துக்கொண்டு வெற்றிப்பட ஹீரோயினாக அவர் மாறுவதற்கு பல வருடப் போராட்டம் நிகழ்ந்தது.

இந்த நிலையில் எங்கு தோல்வியை சந்தித்தோமோ அதே தமிழ் திரையுலகில் மீண்டும் முன்னணி நடிகரான விஜய்க்கு ஜோடியாக “பீஸ்ட்“ படத்தில் நடித்து ரீ என்ட்ரி கொடுத்தார் பூஜா.

புதுடெல்லி

# புதுடெல்லி ஊர்வலத்தில் பெரும் கலவரம்

புதுடெல்லியில் அனுமன் ஜெயந்தி விழா ஊர்வலத்தில் பங்கேற்றோர் மீது, ஒரு சமூகத்தினர் நடத்திய தாக்குதல் கலவரமாக மாறியது. இதில், எட்டு பொலிஸார் காயமடைந்த நிலையில், 14 பேர் கைதாகி உள்ளனர். வன்முறை நடந்த பகுதிகளில் இருந்து வாள், கைத்துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

புதுடெல்லியில் உள்ள ஜஹாங்கிர்புரியில் சித்திரை பௌர்ணமி அன்று இரவு நடந்த அனுமன் ஜெயந்தி ஊர்வலத்தில் பங்கேற்றோர் மீது, மற்றொரு சமூகத்தினர் கல்வீசி தாக்கினர்.

இதனால் அங்கு பெரும் கலவரம் உருவானது. இதில், சில வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. கலவரத்தில் ஈடுபட்ட 14 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இதுகுறித்து, பொலிஸார் கூறியதாவது: “ஜஹாங்கிர்புரியில் இரு சமூகத்தினர் இடையே ஏற்பட்ட மோதலில் எட்டு பொலிஸார் உட்பட ஒன்பது பேர் காயம் அடைந்தனர். அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர். கலவரம் நடந்த பகுதியில் தீவிர கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கலவரத்தில் ஈடுபட்ட 14 பேர் கைதாகி உள்ளனர். அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கெமரா உதவியுடன், கலவரத்தில் ஈடுபட்டோரை அடையாளம் காணும் பணி தொடர்கிறது. வன்முறை நடந்த பகுதிகளில் இருந்து வாள், கைத்துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. என்றனர்.

கலவரத்தில் காயம் அடைந்த பொலிஸ் அதிகாரி மீனா கூறியதாவது: “ஊர்வலம் மசூதி அருகே வந்தபோது திடீரென, இரு தரப்பினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. வாள், தடி போன்ற ஆயுதங்களால் ஒருவரை ஒருவர் தாக்கினர். சிலர் துப்பாக்கியாலும் சுட்டனர். இதில், ஆண்கள் மட்டுமல்லாமல், பெண்களும் தாக்குதலில் ஈடுபட்டனர்” என்றார்.



சென்னை

# ஆளுநரின் தேநீர் விருந்தை புறக்கணித்தது ஏன்?

## முதலமைச்சர் ஸ்டாலின் விளக்கம்

தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி தேநீர் விருந்துக்கு அழைப்பு விடுத்திருந்தார். இதை தி.மு.க புறக்கணித்திருந்தது. இதற்கான காரணம் குறித்து, முதலமைச்சர் ஸ்டாலின் தமிழக சட்டசபையில் விளக்கமளித்துள்ளார்.

முதலமைச்சர் ஸ்டாலின் பேசியதாவது: நீட் விலக்கு சட்டமூலம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் மாளிகையில் கடந்த 210 நாள்களாக முடங்கி கிடக்கிறது. இந்த நேரத்தில், ஆளுநர் அளித்த தேநீர் விருந்தில் கலந்துக்கொள்வது, ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளை புண்படுத்துவதாகவும் சட்டசபை மாண்பினை மேலும் சிதைப்பதாகவும் அமையும். எனவே, அந்த விருந்தில் கலந்துக்கொள்ளவில்லை.

ஆளுநருடன் எங்களுக்கு தனிப்பட்ட விரோதம் இல்லை; எனக்கும் அவருக்கும் சுமூகமான உறவு இருக்கிறது. அவர் பழகுவதற்கு இனிமையானவர். ஆளுநருக்கு உண்டான மரியாதையை நாங்களும் தொடர்ந்து அளிப்போம். தமிழக முதலமைச்சராக சட்டசபையின் மாண்பை காப்பதே என் பொறுப்பு. இதனால் தான் தேநீர் விருந்தை புறக்கணித்தோம் அவர் பேசினார்.

# எதுக்கு இன்னொரு கிசுகிசு



அசோக் செல்வன் ஹீரோவாக நடிக்கும் ‘ஹொஸ்டல்” என்ற திரைப்படத்தில் ப்ரியா பவானி சங்கர் மற்றும் சதீஷ் முக்கிய வேடங்களில் நடிக்கின்றனர். விரைவில் இந்தத் திரைப்படம் வெளியாக உள்ளது.

இந்நிலையில் பிரியா பவானி சங்கருடன் இருக்கும் புகைப்படத்தை பதிவு செய்த சதீஷ் ’ யெஸ்! அதே தான்’ என்று பதிவு செய்திருந்தார். ஆனால் பின்னர் அதனை ’ஹொஸ்டல் டேஸ்’ என்று மாற்றியிருந்தார் .

இதனை கவனித்த ப்ரியா பவானி சங்கர் தனது தனது டுவிட்டரில், ‘ஏதோ டிலிட் பண்ணி இருக்கீங்க ன்னு நம்ம மக்கள் பேசுகிறார்களே? என்று கேள்வி எழுப்பிய நிலையில், ‘எதுக்கு இன்னொரு கிசுகிசு’ என்று சதீஷ் பதிலளித்துள்ளார்.

பிரியா பவானி சங்கர் மற்றும் சதீஷின் இந்த பதிவுகள் தற்போது வைரல் ஆகி வருகின்றன.



# சமந்தாவின் வேற லெவல்

நடிகை சமந்தா அவ்வப்போது உடற்பயிற்சி செய்யும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்து வருவார். இந்த நிலையில் அவர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பயிற்சியாளரின் உதவியுடன் பளுதூக்கும் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் பயிற்சியாளரின் குறிப்புகளை கவனமாக கேட்டு பளுதூக்கும் காட்சி பார்ப்பவர்களை ஆச்சரியப்பட வைக்கிறது. உடல் உறுதியை காக்க மன உறுதியுடன் சமந்தா செய்துள்ள இந்த வீடியோவுக்கு நடிகை காஜல்அகர்வால் உள்பட அதிகமானோர் லைக் செய்துள்ளனர்.



ஐ.பி.எல்: மில்லரின் அதிரடியால்

# சென்னையை வென்ற குஜராத்



இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), பூனேயில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸுடனான போட்டியில் குஜராத் லயன்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட சென்னை, ருத்துராஜ் கைகவாட்டின் 73 (48), அம்பாதி ராயுடுவின் 46 (31), இரவீந்திர ஜடேஜாவின் ஆட்டமிழக்காத 22 (12) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மொஹமட் ஷமி 4-0-20-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு, 170 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய குஜராத், முகேஷ் செளத்ரி, மகேஷ் தீக்ஷன (2), ஜடேஜா, டுவைன் பிராவோவிடம் (3) விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும், டேவிட் மில்லரின் ஆட்டமிழக்காத 94 (51), பதில் அணித்தலைவர் ரஷீட் கானின் 40 (21) ஓட்டங்களோடு 19.5 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக டேவிட் மில்லர் தெரிவானார்.

இந்நிலையில், மும்பையில் நடைபெற்ற மற்றைய போட்டியில் பஞ்சாப் கிங்ஸை சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றிருந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட பஞ்சாப், புவ்னேஷ்வர் குமார் (3), ஜகதீஷ சுஷிந்த், உம்ரான் மலிக்கிடம் (4) விக்கெட்டுகளைப் பறிகொடுத்த நிலையில், லியாம் லிவிங்ஸ்டோனின் 60 (33) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 152 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சண்றைசர்ஸ், ஏய்டன் மார்க்ரமின் ஆட்டமிழக்காத 41 (27), நிக்கலஸ் பூரானின் ஆட்டமிழக்காத 35 (30), ராகுல் ட்ரிபாதியின் 34 (22), அபிஷேக் ஷர்மாவின் 31 (25) ஓட்டங்களோடு 18.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ராகுல் சஹர் 4-0-28-2, ககிஸோ றபாடா 4-0-29-1, அர்ஷ்டீப் சிங் 4-0-32-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக உம்ரான் மலிக் தெரிவானார்.

இந்நிலையில், இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரும், லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸும் மோதவுள்ளன.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில்

## விசேட கராட்டே பயிற்சியும் தரப்படுத்தல் பரீட்சையும்

அஸ்ஹர் இப்றாஹீம்

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் விசேட கராட்டே பயிற்சியும், கறுப்புப் பட்டி மாணவர்களுக்கான தரப்படுத்தல் பரீட்சையும் பல்கலைக்கழகத்தின் கராட்டே பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

சர்வதேச தற்காப்புக்கலைகள் சபையின் பிரதம போதனாசிரியரும், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் விளையாட்டு போதனாசிரியருமான ஏ.ஆர். முஹம்மட் இக்பால் தலைமையிலேயே பயிற்சியும், பரீட்சையும் இடம்பெற்றது.

கறுப்பு பட்டி கராத்தே பிரிவில் பல தரங்களையும் சேரந்தவர்கள் கறுப்புபட்டியில் இருந்து அதன் அடுத்த தரத்திற்கு தரம் உயர்த்தப்பட்டார்கள்.



லீக் 1 தொடர்:

## மர்ஸெய்யை வென்ற பரிஸ் ஸா ஜெர்மைன்



பிரெஞ்சு கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற மர்ஸெய்யுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பரிஸ் ஸா ஜெர்மைன் வென்றது.

பரிஸ் ஸா ஜெர்மைன் சார்பாக, நெய்மர், கிலியான் மப்பே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மர்ஸெய் சார்பாகப் பெறப்பட்ட கோலை டுஜே கலெட்டா கார் பெற்றிருந்தார்.

அந்தவகையில், லீக் 1 புள்ளிகள் பட்டியலில் 74 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பரிஸ் ஸா ஜெர்மைன் உள்ளது. 59 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் மர்ஸெய்யும், 56 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் றெனிஸும், 54 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நீஸும் காணப்படுகின்றன.

லா லிகா தொடர்:

## செவிய்யாவை வென்ற றியல் மட்ரிட்



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், செவிய்யாவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 கோல் கணக்கில் றியல் மட்ரிட் வென்றது.

றியல் சார்பாக, றொட்றிகோ, நாச்சோ, கரிம் பென்ஸீமா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். செவிய்யா சார்பாக, இவான் றகிட்டிச், எரிக் லமெலா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

அந்தவகையில், லா லிகா புள்ளிகள் பட்டியலில் 75 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்ரிட் உள்ளது. இரண்டு போட்டிகள் குறைவாக விளையாடியுள்ள பார்சிலோனா 60 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், செவிய்யாவும் 60 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும், அத்லெட்டிகோ மட்றிட் 60 புள்ளிகளுடன் நான்காமிடத்திலும் காணப்படுகின்றன.

ரஷ்யா

நேட்டோ படைத்தளத்தின்

# மீது ரஷ்யா தாக்குதல்?



நேட்டோ அமைப்பில் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, உக்ரேன் மீது ரஷ்யப் படைகள் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில் உக்ரேனுக்கு ஆதரவாக அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளிலிருந்து அளிக்கப்படும் ஆயுத உதவிகளைத் தடுக்க, நேட்டோ படைத் தளத்தின் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்த வாய்ப்பு உள்ளதாக முன்னாள் பிரித்தானிய பாதுகாப்புத்துறை தலைவர் லார்ட் ரிக்கெட்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக, பிரபல ஊடகமொன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியில் 'புட்டினின் படைகள் உக்ரேனுக்கு பிறநாடுகளிலிருந்து வழங்கப்படும் ஆயுதங்கள் மற்றும் விமானங்களைத் தாக்கி அழிக்க திட்டமிட்டு உள்ளதாகவும், வருகின்ற நாள்களில் உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல், மிகவும் தீவிரமாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், உக்ரேனின் பெரும்பாலாக பகுதிகளை ரஷ்யா கைப்பற்றிவிடும் வாய்ப்பு இருப்பதாகவும், எவ்வாறு இருப்பினும் ரஷ்யா முன்வைக்கும் தீர்வு ஒப்பந்தத்தை உக்ரேன் ஏற்றுக்கொள்ளாது எனவும் இதனால் ஐரோப்பிய யூனியனில் உறுதியற்ற தன்மையை உருவாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ரஷ்ய ஜனாதிபதி புட்டின், கண்டிப்பாக உக்ரேனில் அணுஆயுதம் மற்றும் இரசாயன ஆயுதத்தாக்குதல்களை நடத்தலாம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா

## ஷங்காயில் தாண்டவமாடும் ஒமைக்ரோன்

சீனாவில் கடந்த சில மாதங்களாகக் கொரோனாத் தொற்றுப் பரவலானது தீவிரமடைந்து வருகின்றது.

குறிப்பாக, அந்நாட்டின் பொருளாதார மையமாகத் திகழ்கின்ற ஷங்காய் நகரில், ஒமைக்ரோன் வகை கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலானது வெகுவாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 2.60 கோடி மக்கள் வசிக்க கூடிய ஷங்காவில் கடந்த 2 வாரங்களுக்கும் மேலாக, கொரோனா வைரஸ் பரவலானது தாண்டவமாடி வருவதாகவும், நேற்று முன்தினம் மாத்திரம் 3,590 பேருக்கு கொரோனாப் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் 21,500 பேருக்கு அறிகுறியற்ற பாதிப்பு இருப்பதாகவும் ஷாங்காய் நகர சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், அப்பகுதியில் ஊரடங்கு அமல் படுத்தப்பட்ட பின்னர், கொரோனா வைரஸ் தொற்றால் மூவர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வைத்தியசாலைகளில் அதிகரித்துள்ள நோயாளர்களின் எண்ணிக்கை காரணமாக, பொதுமக்களின் வீடுகளை சிகிச்சை அளிக்கும் மையங்களாக மாற்ற அரசு முடிவெடுத்துள்ளதாகவும், இதற்காக ஷாங்காய் நகரில் வசிக்கும் மக்களிடம் அவர்களது வீடுகளை ஒப்படைக்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





தென்னாபிரிக்கா

வெள்ளத்தில் சிக்கி

## 443 பேர் உயிரிழப்பு



வெள்ளத்தில் சிக்கி 440க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த சம்பவம் தென்னாபிரிக்காவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்காவில் பெய்துவரும் கடும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால், அந்நாட்டின் கிழக்கு கடற்கரை, தென்கிழக்கு கடற்கரைப் பிரதேசங்கள் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளன.

குறிப்பாக, வெள்ளப் பெருக்கு காரணமாக வீடுகள், வீதிகள், வைத்தியசாலைகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

அதேபோல, கவாசுலு, நாடால் பிராந்தியத்தில் வெள்ள அபாயம் காரணமாக, அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளதோடு அப்பகுதிகளில் மின் இணைப்புகளும் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வெள்ள பாதிப்பு காரணமாக இதுவரை 443 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 40,000 பேருக்கும் மேற்பட்டோர் வீடின்றித் தவித்து வருவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடகொரியா

## தாத்தாவின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிய உன்



வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொங் உன்னின் தாத்தாவும் வடகொரியாவின் முக்கிய அரசியல் தலைவருமான மறைந்த கிம் இல் சுங்கின் 110 ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம் பியாங்யாங் நகரில் உள்ள சதுக்கத்தில் நேற்று முன்தினம் மாலை (17) வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் வடகொரிய ஜனாதிபதி கிம்ஜொங் உன், அவரது தங்கை கிம் யோ ஜோங் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு அங்கு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளைக் கண்டு இரசித்தனர்.

'சூரியனின் தினம்' என அந்நாட்டு மக்களால் அழைக்கப்படும் இத்தினத்தையொட்டி, அங்கு பொது விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது.

உக்ரேன்

## உக்ரேன் குறித்து அதிர்ச்சித் தகவல்

உக்ரேன் மீது ரஷ்யப் படை தொடுத்திருக்கும் போரில், இரு நாட்டு வீரர்களும் உக்ரேன் நாட்டு மக்களும் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், இப்போரால் மனித இனத்தில் ஐந்தில் ஒரு பங்குக்கும் கூடுதலானோர் வறுமை, பசியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என ஐ.நா பொது செயலாளர் ஆன்டனியோ குட்ரெஸ் கவலை தெரிவித்து உள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "குறை வளர்ச்சி அடைந்த 45 நாடுகள், மூன்றில் ஒரு பங்கு கோதுமையை ரஷ்யா, உக்ரேனிடம் இருந்து இறக்குமதி செய்கின்றன. எனினும் இப்போரால், தானிய ஏற்றுமதி தடைப்பட்டுள்ளதோடு, விநியோக சங்கிலியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், விலைவாசி விண்ணை முட்டும் அளவுக்கு உயர்வடைந்துள்ளதுடன் நடப்பாண்டு தொடங்கியதில் இருந்து, கோதுமை மற்றும் சோளம் ஆகியவற்றின் விலை 30 சதவீதம் உயர்ந்து விட்டது" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் செவ்வாய்க்கிழமை, 19 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.